வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 25.08.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 258 | பக்கங்கள் : 16

# மன்னாரில் இருவர் கைத்துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை!

## இரட்டை கொலைக்கு பழிவாங்கல்?

மன்னார், ஓகஸ்ட் 25

**மன்னாரில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் இனந் தெரியாத நபர்களால் கைத்துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தக் கொலைக்கு 9 எம். எம். கைத்துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருப்ப தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

அடம்பன் - முள்ளிக் கண்டல் பகுதியில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இடம் பெற்ற இந்தத் துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் நொச் சிக்குளத்தை சேர்ந்த ஜேசு தாசன் அருந்தவராஜா (வயது - 43), சன்னார் கிரா மத்தை சேர்ந்த கணபதி காளிமுத்து (வயது 56) ஆகி யோரே உயிரிழந்தனர்.

இவர்கள் இருவரும் வயலுக்கு சென்றுகொண் டிருந்தபோதே சுட்டுக் கொல்லப்பட்ட னர். இந்தக் கொலைகளுக்கு 9

11



## வடமராட்சியில் விபத்து; 14 வயது சிறுவன் பலி!

வடமராட்சி, ஓக. 25

டிப்பரும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 14 வயது சிறுவன் உயிரிழந்தார். இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை மதியம் வடமராட்சி - கரணவாய் - கொற்றாவத்தை - கணபதி மில் அருகே இடம்பெற்ற இந்த விபத்துக் குறித்து மேலும் அறிய வருவதாவது,

மோட்டார் சைக்கிளும் டிப்பர் வாகனமும் வளைவு ஒன்றில் திரும்பிய போது இரு வாகனங் களும் நேருக்கு நேராக மோதுண்டன. இதன் போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் தூக்கி வீசப்பட்டனர்.

11

## பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை!

கொழும்பு, ஓக. 25

நாட்டின் தேசிய பாதுகாப்பு அல்லது இன முரண்பாடுகள் தொடர்பில் எந்தவொரு வெளிநாட்டு புலனாய்வு சேவையிடமிருந்தும் அரசாங்கம் எந்தத் தக வலையும் பெறவில்லை என்று இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரே மித்த பண்டார தென்ன கோன் தெரிவித்தார்.

நேற்று வியாழக் கிழமை பாராளுமன்றி லேயே அவர் இந்தத் தகவலை தெரிவித் தார்.

பல்வேறு வதந்திகள் மற் றும் இது

11

## 3 இலங்கையர்கள் இந்தியாவில் கைது


பெங்களூர், ஓக. 25

கொலை, கொள்ளை குற்றங்களுடன் தொடர்பு டைய மூன்று இலங்கையர்களை இந்திய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான மூவருக்கும் பெங்களூரில் அடுக்கு மாடி குடியிருப்பில் இடம் ஒன்றை வாடகைக்கு பெற்றுக் கொடுத்த இந்தியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில், இவர்கள் கடல் வழியாக இந்தியா வுக்குள் நுழைந்தனர் என்று அறிய வருகின்றது. கைதான மூவரும் பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடைய வர்கள் என்று அறிய வருகின்றது. இவர்களுக்கு எதிராக இலங்கையில் 4 முதல் 5 கொலைக் குற்றச்சாட்டுகள் உள்ளன என்று தெரிய வந்துள்ளது. (ஐ)

## இந்திய பாதுகாப்பு மந்திரி இலங்கை வருகின்றார்



கொழும்பு, ஓக. 25

இந்திய பாதுகாப்பு அமைச் சர் ராஜ்நாத் சிங் இலங்கை வரு கின்றார். அடுத்த மாதம் 2 அல் லது 3ஆம் திகதி அவர் இலங்கை வருவார் என்று கூறப்படுகின்றது.

இந்தப் பயணத்தின்போது அவர், ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க மற்றும் அவரின் பணிமனையின் பிரதானி சாகல ரத்நாயக்க ஆகியோருடன் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கை - இந்தியா இடையே பாலம், கடல் வழிய ாக மின்சாரம் வழங்கும் திட்டம்

11

### வவுனியா இரட்டைக்கொலை

## பிரதான சந்தேகநபரிடமிருந்து சிறையில் கைபேசி மீட்கப்பட்டது

வவுனியா, ஓக. 25

வவுனியா - தோணிக்கல் இரட்டை கொலை சம்ப வம் தொடர்பில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள பிரதான சந்தேகநபரிடம் இருந்து கைபேசி ஒன்று மீட்கப்பட்டதாக குற்றப்புலனாய்வு திணைக் களத்தினர் நீதிமன்றுக்கு அறியப்படுத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் வவுனியா நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைகளுக்கு எடுத் துக் கொள்ளப்பட்ட போதே குற்றப்புலனாய்வு திணைக் களத்தினர் இதனைத் தெரிவித்துள் ளனர்.

11

# வடக்கு, கிழக்கில் அதீத வெப்பம்; அவதானமாக செயல்படுங்கள்!

கொழும்பு, ஓக. 25

வவுனியா, முல்லைத்தீவு, கிழக்கு மாகாணம் உள்ளிட்ட 8 மாவட் டங்களில் சில இடங்களில் அதீத வெப்பநிலை உணரப்படுகின்றது. இது மேலும் அதிகரிக்கும் அபா யம் உள்ளதால் மக்கள் அவதான மாக இருக்க வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களத் தின் இயற்கை அபாய முன் னெச்சரிக்கை மையம் எச்ச ரித்துள்ளது.

11

## தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்!

### யாழ். அரச அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 25

தற்போது நிலவும் வறட்சியை கவனத்தில் கொண்டு மக்கள் தண்ணீரை சிக்கமாகப் பயன்படுத்த வேண்டும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் ஆ. சிவபாலசுந்த ரன் அறிவுறுத்தியுள்ளார்.

தற்போதைய நிலைமையின்படி 22 ஆயிரம் குடும் பங்கள் வரை யாழ்ப்பாணத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள் ளன. இதில், சுமார் 8 ஆயிரம்

11

## அரசாங்கத்தை தக்கவைப்பதற்காக இன மோதல் ஏற்படுத்தப்படுகின்றது!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 25

குருந்தூர் மலை விவ காரம், மட்டக்களப்பு காணி பிரச்னைகளை அடிப்படையாகக் கொண்டு இனங்களி டையே மோதல் தூண்டப் படுகின்றது. இது, தற் போதுள்ள அரசாங்கத் தைத் தொடர்ந்தும் ஆட்சியில் தக்க வைத்தி ருக்க மேற்கொள்ளப்படும் சதித்திட்டமா என்று சந்தேகம் எழுவதாக ஐக் கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ் மான் தெரிவித்தார்.

கொழும்பில் அவர் நேற்று நடத்திய செய்தி யாளர் சந்திப்பி லேயே இதனைத்

11

## இலங்கை நிலவரத்தை அமெரிக்கா ஐ. நா.வுக்கு எடுத்து செல்ல வேண்டும்!

### சீ. வீ. கே. சிவஞானம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஓக. 25

அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையின் தற் போதைய நிலைமையை ஐ. நா வுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞா னம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வந்த அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கை நேற்று முன் தினம் தமிழ் அரசி யல் கட்சிகளின்

11

## இப்படியும் நடக்கிறது

அண்மையில் கொழும்பில் சில அரசியல் முக்கியஸ்தர்களை ஒன்றாகச் சந்திக்க முடிந்தது. அவர்களில் பலர் ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த போது அவர்களின் ஆட்சியை அகற்றுவதற்காக ஒன்றிணைந்து உழைத்தவர்கள். 'நல்லாட்சி' அரசாங்கத்தைக் கொண்டு வருவதற்காக முன்னின்று உழைத்தவர்கள்.

'நல்லாட்சி'க்கு முன்னர் இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலிலும் சரத் பொன்சேகாவை வெல்ல வைப்பதற்காக உழைத்தவர்கள்.

சரத் பொன்சேகாவை பொதுவேட்பாளராக அப்போது பிரதான எதிர்க்கட்சியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் இன்றைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவும் உடன்பட்டு அவரை வெல்ல வைப்பதற்காக உழைத்தார்.

பொதுவேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் சரத் பொன்சேகா எப்படியெல்லாம் மாறியிருந்தார் என்பது பற்றி அங்கிருந்த ஒரு நண்பர் விவரிக்கத் தொடங்கினார்.

சரத் பொன்சேகா பொது வேட்பாளராக அறிவிக்கப் படுவதற்கு முன்னதாக நடந்த சந்திப்புகளில் கலந்து கொண்ட ஒருவர் சொன்னார், "சரத் பொன்சேகா எப்படிப்பட்டவர் என்பதை அவர் மிக சொற்ப காலத்திலேயே காட்டிக்கொண்டார். வேட்பாளராகத் தெரிவாகும் முன்னதாக ரணில் விக்கிரமசிங்கவை, 'சேர்' என்று அழைத்தவர், வேட்பாளராக அறிவிக்கப்பட்ட உடனேயே 'மிஸ்டர் விக்கிரமசிங்க' என்றார். பின்னர் சில நாட்களில் ரணில் என்று அழைத்தார். அதற்கும் பிறகு சில நாட்களில் 'ஆர். டபிள்யூ.' என்றார்' என்று சொன்னார் அந்த நண்பர்.

தேர்தல் நடைபெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னதாக கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இரண்டு மாடிகளை வாடகைக்கு அமர்த்தி அங்கேயே முக்கிய சந்திப்புகளை நடத்திக்கொண்டிருந்தார் சரத் பொன்சேகா.

ஒருநாள் அந்த நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்த அவுஸ்திரேலிய பிரமுகர் ஒருவரை சந்திக்க வந்திருந்த ரணிலுக்கு அப்போது அங்கே சரத் பொன்சேகாவும் தங்கியிருக்கிறாரெனத் தகவல் தெரிவிக்கப்பட்டதாம்.

அந்தத் தகவல் கிடைத்த பின்னரும் அவரை சந்திக்காமல் போவது சரியல்ல என்ற நினைப்பில் அவர் அப்போது தங்கியிருந்தாரெனக் கூறப்பட்ட அந்த அறைக்கு சென்றிருக்கிறார் ரணில்.

அங்கே சரத் பொன்சேகா மாத்திரமன்றி, மங்கள சமரவீர, அர்ஜூன ரணதுங்க என்று ஒரு பெரிய பட்டாளமே இருந்திருக்கின்றது.

ரணிலைக் கண்டதும், சரத் பொன்சேகா கேட்டாராம். 'நாங்கள் இங்கே யார் யாருக்கு என்ன என்ன அமைச்சுப் பதவிகளை வழங்குவது என்று ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கின்றோம். நீங்களும் வந்தது நல்லதாகப் போய்விட்டது. உங்களுக்கு என்ன அமைச்சுப் பதவி தேவை என்று சொல்லுங்கள்?' என்றிருக்கிறார்.

ரணில், உள்ளே வந்த வேகத்திலேயே திரும்பி செல்வதற்கு தயாராகிவிட்டு சொன்னாராம், 'எனக்கு எந்த அமைச்சும் தேவையில்லை. ஆனால், தமிழ் மக்களுக்கு சிலவற்றை செய்வோம் என்று உறுதியளித்திருக்கிறோம். அதை செய்தால் எனக்கு போதும்.'

இந்தத் தகவலை சொன்ன அந்த நண்பர் இப்போது ரணிலின் முகாமில் இல்லை. ஆனாலும் அவர் நடந்த சம்பவங்களையே அங்கு இருந்த வர்களோடு பகிர்ந்து கொண்டார்.

அதைக் கேட்டதும் எனக்கு மனதில் ஓடியது ஒன்றுதான்.

நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் யார் யார் போட்டியிடப்போகிறார்கள் என்பது இன்னமும் உறுதியாகத் தெரியவில்லை. ஆனால், யார் போட்டியிட்டாலும் இலகுவாக வெற்றி பெறக் கூடிய நிலைமை நாட்டில் இல்லை. கடந்த தேர்தலில் கோட்டாபய தனிச்சிங்கள வாக்கில் வெற்றிபெற்றது போல இந்தத் தடவை யாரும் வெற்றிபெறவும் முடியாது. நிச்சயம் அடுத்த தேர்தலில் சிறுபான்மையினர் வாக்குகள் வெற்றியில் முக்கிய பங்கு வகிக்கப்போகின்றன.

அதனால்தான் தமிழ் கட்சிகள் இந்தத் தேர்தலை சரியாக பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை இப்போதே தமிழர் தரப்பிலிருந்து கிளம்பியிருக்கின்றது.

தமிழ் மக்கள் சமஷ்டித் தீர்வையே நாடிநிற்கிறார்கள் என்பதை தெளிவாக சொல்கின்ற வகையில் தமிழ் ஒருவர் தமிழ் பொதுவேட்பாளராக களம் இறங்கவேண்டும். அவ்வாறு முயற்சிகளை தொடங்குகின்றபோது முக்கிய வேட்பாளர்கள் இருவரோ அல்லது மூவரோ தமிழர்களின் ஆதரவைப் பெற தமிழர் தரப்போடு பேச வருவார்கள். அவ்வாறு வருகின்றபோது பேரம்பேசும் சக்தியை பெறலாம் என்று சில தமிழ் கருத்துருவாக்கிகள் எழுதி வருகின்றனர்.

அவ்வாறு பேரம்பேசுகின்ற நிலை வந்தால் ரணிலுடன் பேசி ஒரு முடிவுக்கு வருவது நல்லது என்ற எண்ணமே மேலேயுள்ள சரத் - ரணில் சந்திப்பு பற்றிய செய்தியை அறிந்தபோது வந்தது.

இது ரணில் புகழ் பாடும் சமாச்சாரம் என்று யாரும் கூறாமல் இருந்தால் சரி.

- ஊர்க்குருவி.

## மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்தும் செயல்களை அரசு தடுக்கவேண்டும்!

கொழும்பு, ஓக. 25

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயல்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும். இனவாதத்தைத் தூண்டி விட்டு நாட்டில் மீண்டும் யுத்தத்தை தோற்றுவிக்கும் செயல்பாடுகளை அரசாங்கம் உடனடியாக தடுக்க வேண்டும். அது அனைவரின் பொறுப்பாகும் என பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயல்படும் எதிரணியின் உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித் தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலை பௌத்த மரபுரிமைகளை கொண்டுள்ளது. மகாவம்சம் உட்பட பௌத்த வரலாற்று நூல்களில் குருந்தூர்மலை குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1933ஆம் ஆண்டு காலப்பகுதியில் குருந்தூர் மலையில் 78 ஏக்கர் நிலப்பரப்பு தொல்பொருள் மரபுரிமை என்று வர்த்தமானி அறிவித்தல் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டது.

மறுபுறம் 1,250 ஹெக்டெயர் நிலப்பரப்பை கொண்டுள்ள நாகசோல வனப்பகுதியில் பௌத்த மரபுரிமைகள் அடையாளப்படுத்தப்பட் டுள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டுள்ளன.

தமிழர்களுக்கு சட்ட அந்தஸ்துடன் காணிகளை வழங்குவதை நாங்கள் எதிர்க்கவில்லை. வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள், தொல்பொருள் மரபுரிமைகள் ஆகியவற்றை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் காணி பிரச்சினைக்கு காணி ஆணைக்குழு ஊடாக தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயல்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும்.

இனவாதத்தை தூண்டி விட்டு நாட்டில் மீண்டும் யுத்தத்தை தோற்றுவிக்கும் செயல்பாடுகளை அரசாங்கம் உடனடியாக தடுக்க வேண்டும். அது அனைவரது பொறுப்பாகும் - என்றார்.

இதேவேளை, குருந்தூர் மலை விவகாரம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிப்பதை அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தவிர்த்துக் கொண்டார். (ஐ)

## மண்டரின் மொழி மூலம் சீனர்கள் வீசாவுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

கொழும்பு, ஓக. 25

சீனப் பிரஜைகள் இலங்கைக்கு வரும்போது அவர்களுக்கு வருகை தரும் வீசா வசதியை (on arrival visa facility) வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் மற்றும் மண்டரின் மொழியில் ஒன்லைன் மூலம் வீசா விண்ணப்பங்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் தொடர்பான இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை குறித்து சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியது.

அதற்கமைய, வெளிவிவகார அமைச்சில் செயற்படும் ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு வலயம் தொடர்பான பிரிவின் பணிகள் மற்றும் அந்த வலயம் சம்பந்தப்பட்ட இந்நாட்டின் இராஜதந்திர கொள்கைகள் தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்த வலயத்திலுள்ள நாடுகள் இலங்கையுடன் நட்புரீதியான கொள்கையிலிருந்து செயற்படுவதாக வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்ததுடன், அந்த உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பது குழுவின் கருத்தாக இருந்தது. அதனால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடித் தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுக்குமாறு அதிகாரிகளுக்குக் குழு ஆலோசனை வழங்கியது.

அத்துடன், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள்/உயர் ஸ்தானிகராலயங்களின் இணையத்தளங்கள் ஊடாக இலங்கை பற்றிய சரியான தகவல்களை வழங்கி இலங்கை சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

(ஐ)

## யோகக் கலை கற்கை புதிய பிரிவு ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஓக. 25

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு உடல், உள மேம்பாட் டுக்காக இலவசமாக நடத்தப்படுகின்ற யோகக்கலை அடிப்படை பயிற்சிநெறியின் புதிய பிரிவு நல்லூர் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் செப் ரெம்பர் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணி வரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இரு பாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைப் பயிற்சிநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

பயில விரும்புவோர் வட மாகாண கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத்தளத்திலோ விண்ணப்பப் படிவங்களை பெற்று "கல்வி அமைச்சு, வட மாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்." எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்று கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (ஐ)

## இரத்தினக்கல் ஏற்றுமதி மூலம் 200 கோடி டொலரை பெற திட்டம்

கொழும்பு, ஓக. 25

இரத்தினக்கற்கள் ஏற்றுமதி மூலம் 2025ஆம் ஆண்டளவில் 200 கோடி அமெரிக்க டொலர் வருடாந்த வருமானத்தை ஈட்ட எதிர்பார்ப்பதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் தலைவர் விராஜ் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் இரத்தினக்கற்கள் ஏற்றுமதி மூலம் சுமார் 31. 2 கோடி அமெரிக்க டொலர்களை வருமானமாக பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய இரத்தினம் மற்றும் ஆபரண ஆணையம் இந்த ஆண்டு இறுதிக்குள் 50 கோடி அமெரிக்க டொலர்களை எட்டும் என கணித்துள்ளது.

இதேவேளை, சட்டவிரோத இரத்தினக்கல் ஏற்றுமதியை கட்டுப்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது குறித்தும் அவர் கவனம் செலுத்தியுள்ளார்.

இந்த சட்டவிரோத ஏற்றுமதி 200 கோடி அமெரிக்க டொலர் இலக்கை அடைவதற்கு குறிப்பிடத்தக்க சவாலாக உள்ளது என்றார். நாட்டுக்குள் ஏலம் விடுவதன் மூலம் வெளிநாட்டு கொள்வனவு செய்பவர்கள் நேரடியாக இரத்தினக்கற்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
25.08.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அமெரிக்க தூதுவரின் கருத்து

"13ஆவது திருத்தச் சட்டத்தை கோரும் உங்களின் நிலைப்பாடு சரியானது", யாழ்ப்பாணத்தில் தமிழ் கட்சிகளின் தலைவர்களை சந்தித்த போது அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றார். இதன் மூலம், அண்மைக்காலத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் விடயங்கள் நகர்வதற்கான சாத்தியப்பாடுகள் இல்லையென்பதை மறைமுகமாக அவர் சுட்டிக் காட்டியிருக்கின்றார். இந்தக் கருத்து ஆச்சரியமானதல்ல. இதனைப் பலரும் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தனர். 'ஈழநாடு'ம் பல்வேறு சந்தர்ப்பங்களில் இதனை சுட்டிக்காட்டியிருக்கின்றது. ஆனால், தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள் என்போர் இந்த விடயத்தின் ஆழத்தை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. விடயங்களை தந்திரோபாயமாக நகர்த்த முற்படவில்லை. இதன் காரணமாக, இப்போது இராஜதந்திரிகளே 13இற்கு அப்பால் செல்வதிலுள்ள சிக்கல்களை மறைமுகமாக சுட்டிக்காட்டும் நிலைமை உருவாகியிருக்கின்றது.

ஆனால், இப்போதும் தமிழ் கட்சிகள் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டில் இல்லை. இந்திய பிரதமர் மோடிக்கு 13ஆவது திருத்தத்தை வலியுறுத்தி கடிதம் அனுப்பிய போதிலும்கூட, தமிழ் மக்கள் மத்தியில் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் முன்னுக்கு பின்னர் முரணான கருத்துகளையே முன்வைத்து வருகின்றனர். குறிப்பாக இலங்கை தமிழரசு கட்சி சமஷ்டி கோரிக்கையில் உறுதியாக இருப்பதான கருத்தொன்றை வெளிப்படுத்தி வருகின்றது. இந்தக் கருத்து அதிகம் தேர்தல் அரசியலை இலக்கு வைக்கும் நோக்கம் கொண்டது.

ஆனால் நடைமுறையில், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயமே சிக்கலான ஒன்றாக இருக்கின்றது. இந்த நிலையில் எந்த அடிப்படையில் அதனை தாண்டிச் செல்வது? - அதற்கான அரசியல் சூழல் இருக்கின்றதா? - இந்தக் கேள்விகளுக்கு எவரிடமும் பதில் இல்லை. இவ்வாறானதொரு பின்னணியில்தான் 13ஆவது திருத்தத்தை வலியுறுத்துவதை அமெரிக்க தூதுவர் வரவேற்றிருக்கின்றார்.

அமெரிக்கா அரசியல் தீர்வு விடயத்தில் வெளிப்படையான நிலைப்பாடுகளை இதுவரையில் வெளியிட்டதில்லை. இந்தியா ஒன்றுதான் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தி வருகின்றது. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் இலங்கைக்குள் அனைத்து மக்களின் ஆதரவுடன்தான் அரசியல் தீர்வை காணமுடியும். எவ்வாறான அரசியல் தீர்வு நாட்டுக்கு பொருத்தமானது - என்பதை நாட்டிலுள்ள அனைத்துத் தரப்புகளும் இணைந்தே தீர்மானிக்க முடியும். இதில், அமெரிக்கா எதேச்சாதிகாரமாக தலையீடு செய்ய முடியாது. இதுவே, அமெரிக்காவின் நிலைப்பாடாக இருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் அரசமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்தும் கோரிக்கை முன்னரை விடவும் வலுவாக முன்வைக்கப்படுகின்றது.

ஆனால், தர்க்க ரீதியாக இது சரியாக இருந்தாலும் நடைமுறையில் அனைத்து தரப்புகளினதும் ஆதரவுடன் அரசியல் தீர்வை காணுதல் என்னும் நிலைப்பாடு சிக்கலான ஒன்றாகவே இருக்கின்றது. வெளித்தலையீடுகளின்றி இலங்கையின் சிங்கள ஆளும் வர்க்கம் அவ்வாறானதொரு தீர்வுக்கு செல்லும் - அதற்கான ஆர்வத்தை கொண்டிருக்கின்றது என்பதற்கு இதுவரை சான்றுகள் இல்லை. தமிழ் மக்களுடன் அதிகாரத்தைப் பகிரும் விடயத்தில் தொடர்ந்தும் இனவாத மனோநிலையிலேயே செயல்பட்டு வருகின்றது. இந்தப் பின்புலத்தில்தான் அரசமைப்பில் இருக்கின்ற விடயங்களை அமுல்படுத்துவதற்குக்கூட, வெளியாரின் தலையீடுகள் தேவைப்படுகின்றன.

இந்த அடிப்படையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்தில் வெற்றிபெற வேண்டுமாயின் - அதிலும் இந்திய மற்றும் அமெரிக்க தலையீடுகள் தேவைப்படுகின்றன. காத்திரமான தலையீடுகள் இல்லையென்றால் 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கம்கூட சந்தேகமான ஒன்றுதான்.

# அரியாலை புத்தக அரங்க விழா இரண்டாம் நாள் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஓக. 25

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டையொட்டி "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் பதின்மூன்றாவது நிகழ்வு அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் (ஸ்ரான்லி கல்லூரி) இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நாளை மறுதினம் வரை நடைபெறவுள்ளது.

இதில், நாளை சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறள்ள ஈழத்து நூல்களை அறிவோம் - நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் நிகழ்வு ஓய்வுபெற்ற இலங்கை நிர்வாக சேவை அதிகாரி அ. ஜெயரத்தினம் நினைவு அரங்கில் சமூக செயல்பாட்டாளர் க. ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் நூல் அறிமுக உரைகளை பி. முத்துலிங்கத்தின் "மார்க்சியக் கண்ணோட்டத்தில் சுதந்திரத்துக்குப் பிற்பட்ட இலங்கையின் கல்விப் பிரச்னைகளும், தரமான கல்வியும்" என்ற ஆய்வுநூல் தொடர்பாக ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. அநாதரட்சகன், பேராசிரியர் சி. மௌனகுருவின் 'கூத்த யாத்திரை' நூல் பற்றி ஆசிரிய ஆலோசகர் யோ. யோண்சன் ராஜ்குமார், கலாபூஷணம் எஸ். சிவானந்தராஜாவின் 'புது மையும் பழமையும்' நூல் தொடர்பாக ஆய்வாளர் ச.சத்தியதேவன், சோமையா சுதர்சனின் 'குருதி படிந்த நிலம்' கவிதை நூல் தொடர்பாக ஆய்வாளர் முருகையா சதீஸ் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

நூல் அறிமுக நிகழ்வை தொடர்ந்து, மாலை 5 மணியளவில், சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில், மருத்துவப் பேராசிரியர் நந்தியின் சிறுகதையைத் தழுவி, ஆசிரியர் பு. கணேசராசாவால் நெறியாள்கை செய்யப்பட்டு, இருபதுக்கு மேற்பட்ட அரங்குகளை கண்ட 'காதலுக்கு மருந்து' நாடகமும், முப்பதுக்கு மேற்பட்ட அரங்குகளைக் கண்ட 'தலையெழுத்து' நாடகமும் நடைபெறும். (ஐ)

## மாணவர் இதழ் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், ஓக. 25

கையெழுத்து பிரதியாக முன்னர் வெளிவந்த 'சிறு பொறி' மாணவர் இதழ் அச்சுப் பிரதியாக வெளிவருகிறது.

இதன் வெளியீடு சுழிபுரம் கே. ஏ. எஸ். சத்தியமனை நூலக அரங்கத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட சட்டத்தரணியும் பதில் நீதிவானுமான சோ. தேவராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வலி. மேற்கு பிரதேச செயலாளர் பிரேமினி பொன்னம்பலம் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

## துர்க்காதேவி ஆலயத்தில் இன்று வரலட்சுமி பூசை!

யாழ்ப்பாணம், ஓக. 25

வரலாற்று பிரசித்தி பெற்ற தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரத விசேட பூசை நடைபெறவுள்ளது.

இன்று மதியம் ஒரு மணியளவில் துர்க்கை அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து விசேட பூசை என்பன நடைபெற்று பிற்பகல் 3 மணியளவில் அடியவர்களுக்கு வரலட்சுமி விரத நூல் வழங்கும் நிகழ்வு ஆரம்பமாகுமென ஆலய தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார். (ஐ)

## யாழ். போதனா மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி அன்பளிக்கப்பட்டது!



யாழ்ப்பாணம், ஓக. 25


எஸ். கே . நாதன் பௌண்டேசன் நிறுவனத்தால் யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் யாழ் போதனா மருத்துவமனையில் இறந்த உடலங்களை வாடகை வாகனங்கள் மூலமாகவே உடல்கள் கொண்டு செல்லப்பட்டன. இந்நிலையில், அமரர் வாகன ஊர்தி ஒன்றை பெற்றுத்தருமாறு போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி அண்மையில் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கைக்கு அமைவாகவே, எஸ். கே. நாதன் பௌண்டேசன் பணிப்பாளர் நாதனால் 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான அமரர் ஊர்தி அன்பளிப்பு செய்யப்பட்டது.

போதனா மருத்துவமனை வளாகத்தில் நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வில், எஸ். கே. நாதன் பௌண்டேசன் பணிப்பாளர் நாதன், யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர், சட்ட மருத்துவ அதிகாரி, மருத்துவ நிபுணர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர். (ஐ-03)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டிய வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**இடபம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட்களை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மிதுனம்**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் அதிகரிக்கும். உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். அமோகமான நாள்.

**கடகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உங்களின் உழைப்பால் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**சிம்மம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**கன்னி**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பணிப்போர் வந்து நீங்கும். இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். மறைமுக பிரச்னைகள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத்தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

**கும்பம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

# நளினியின் கடவுச்சீட்டு விண்ணப்பம் 4 வாரங்களில் முடிவெடுக்க உத்தரவு

சென்னை, ஒக. 25

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று முன்விடுதலையான நளினியின் கடவுச்சீட்டு விண்ணப்பத்தின்மீது 4 வாரங்களில் முடிவெடுக்க மண்டல கடவுச்சீட்டு அதிகாரிக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி தாக்கல் செய்துள்ள மனுவில், “கடந்த 32 ஆண்டுகள் சிறைவாசத்துக்குப் பிறகு விடுதலையான நிலையில் லண்டனில் வசிக்கும் என் மகளுடன் இருக்க விரும்புகிறேன். அங்கு செல்வதற்காக கடவுச்சீட்டு கோரி ஒன்லைன் மூலமாக ஜூன் 12ஆம் திகதி விண்ணப்பித்தேன். ஜூன் 14ஆம் திகதி சாலிகிராமத்தில் உள்ள கடவுச்சீட்டு சேவை மையத்தில் நேரில் சென்று ஆவணங்களை சமர்ப்பித்தேன். பொலிஸாரின் சரிபார்ப்புக்கு பிறகு கடவுச்சீட்டு வழங்கபடும் என கடவுச்சீட்டு பணிமனை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

திருவான்மியூரில் தற்போது வசிக்கும் வீட்டுக்கு ஒகஸ்ட் 1ஆம் திகதி வந்த திருவான்மியூர் பொலிஸார் விசாரணை நடத்தி சென்றனர். ஆனால், தற்போது வரை கடவுச்சீட்டு வழங்கப்படவில்லை. எனவே பொலிஸார் சரிபார்த்த விவரங்களை கடவுச்சீட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கவும் எனக்கு கடவுச்சீட்டு வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு உத்தரவிட வேண்டும்” என மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கின் விசாரணையில், “விசாரணை நிறைவடைந்து விட்டது. விவரங்களை சரிபார்த்த அறிக்கை கடச்சீட்டு அதிகாரியிடம் ஒகஸ்ட் 11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டு விட்டது” எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி, நளினியின் கடவுச்சீட்டு விண்ணப்பத்தின் மீது 4 வாரங்களில் முடிவெடுக்க மண்டல கடவுச்சீடு அதிகாரிக்கு உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார். (ஐ)

# ஆளுநரை தி. மு. கவினரே வம்புக்கு இழுக்கின்றனர்!

## பா. ஜ. க. தமிழக தலைவர்

கோவை, ஒக. 25

“நீட் விலக்கு சட்டத் திருத்தத்தில் ஆளுநர் கையெழுத்திட்டு, குடியரசு தலைவருக்கு அனுப்பிவிட்டார். இனி குடியரசுத் தலைவர் முடிவெடுப்பார். எனவே, அரசு சார்பில், குடியரசுத் தலைவரிடம்தான் முறையீடு செய்ய வேண்டும். நீட் குறித்து ஆளுநர் கூறியதில் எந்த தவறும் இல்லை” என்று பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

“ஆளுநர் சில கருத்துகளைக் கூறுகிறார். அதில் தவறு என்ன இருக்கிறது? நீட் பரீட்சையைப் பொறுத்தவரைக்கும் ஏழைகளுக்கு எதிரி இல்லை என்று கூறியுள்ளார். அரச பாடசாலை மாணவர்கள் நிறைய பேர் மருத்துவ படிப்பில் சேர்ந்துள்ளனர் என்று கூறியுள்ளார். ஆளுநரைப் பொறுத்தவரையில், அவர் கூறியுள்ள புள்ளி விவரங்களுடன் கூடிய தகவலில் எந்த தவறும் இல்லை.

ஆனால், ஆளுங்கட்சியினர் ஆளுநரைப் பேசுகின்ற முறை சரியானதா? சீண்டிப்பார், தொட்டுப்பார், பதவியை இராஜினாமா செய்துவிட்டு வா, தமிழகத்தில் எந்த தொகுதியில் வேண்டுமானாலும் நிற்க சொல்கின்றனர். ஒருவேளை ஆளுநர் தனது சொந்த ஊரான பீஹாருக்கு வரச் சொன்னால், என்ன செய்வார்கள்? தி. மு. கவினருக் குத்தான் ஹிந்தி தெரியாதே?

இப்போது சம்பந்தமே இல்லாமல் ஆளுங்கட்சியினர் ஆளுநரை வம்பிழுத்துக் கொண்டுள்ளனர்” - என்றார். (ஐ)

# இலங்கை கடற்படை பறித்த படகுகளுக்கு நிவாரணம்!

இராமேஸ்வரம், ஒக. 25

இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட 33 படகுகளுக்கு, முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1.23 கோடி வழங்குவதற்கான அரசாணையை தமிழக அரசு நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

இலங்கை கடல் பகுதியில் தடை செய்யப்பட்ட வலைகள், படகுமூலம் மீன் பிடிக்கும் உள்நாட்டு மீனவர்களுக்கு சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படுகிறது. இதேபோல, இலங்கை கடல் பகுதியில் மீன் பிடிக்கும் வெளிநாட்டுப் படகுகளுக்கும் தண்டனை மற்றும் அபராதம் விதிப்பதற்கான புதிய சட்டம் இலங்கையில் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டம் நிறைவேற்றப் பட்டதில் இருந்து இலங்கை கடற்படையினரால் பிடிக்கப் பட்ட தமிழக மீனவர்களின் படகுகள் அரடைமையாக்கப்படுகின்றன. ஆவணங்களை சமர்ப்பித்து வாதிட்ட சில உரிமையாளர்களின் படகுகளே விடுவிக் கப்படுகின்றன.

இந்நிலையில், இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு, இலங்கையில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள தமிழக சேர்ந்த படகுகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்தக் கோரிக்கையை ஏற்று 33 படகுகளின் உரிமையாளர்களுக்கு ரூ.1.23 கோடியை முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்குவதற்கான ஆணையை தமிழக அரசு தற்போது வெளியிட்டுள்ளது. (ஐ)

# இலங்கை கடற்கொள்ளையர்கள் மீண்டும் மீனவரிடம் கைவரிசை!

நாகப்பட்டினம், ஒக. 25

நாகை மாவட்டம் வேதாரண்யத்தை சேர்ந்த மீனவர்களை தாக்கிய இலங்கை கடற் கொள்ளையர்கள் 2 இலட்சம் (இந்திய) ரூபாய் மதிப்பிலான பொருட்களை கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

ஆறு பேர் கொண்ட கொள்ளைக் கும்பலே தங்களை தாக்கியதாகவும் படகுகளில் இருந்த ஜி. பி. எஸ். கருவி, வோக்கி ரோக்கி, பற்றரிகள் மீன்பிடி வலைகள், மீன்கள், கைபேசிகள், 20லீற்றர் டீசல் உள்ளிட்ட ரூ.2 லட்சம் மதிப்பிலான பொருட்களை கொள்ளையிட்டு சென்றனர் என்றும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்த மீனவர் ஒருவர் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை கடந்த 21ஆம் திகதியும் நாகபட்டினத்தை சேர்ந்த 5 மீனவர்களை கடற் கொள்ளையர்கள் தாக்கி, பொருட்களை கொள்ளையிட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மின் கம்பியில் மோதியது தேர்!

## இருவர் மரணம்! மூவர் பாதிப்பு!! நமுனுகுலவில் சோகம்

கொழும்பு, ஓக. 25

**பசறை நமுனுகுல பூட்டாவத்தை பிரதேசத்தில் உள்ள கோயில் ஒன்றின் வருடாந்த தேர் ஊர்வலத்தின்போது மின்சாரம் தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளனர். 3 பேர் காயமடைந்துள்ளனர்.**

**நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

விபத்தில் உயிரிழந்த இருவர் பூட்டாவத்தை நமுனுகுல பிரதேசத்தைச் சேர்ந்த பி.செல்வகுமார் (வயது-28) மற்றும் பி. ரமேஷ் (வயது-38) மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த 39, 43 மற்றும் 57 வயதுடைய மேலும் மூவர் பசறை ஆரம்ப வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நமுனுகுல பூட்டாவத்தை ஸ்ரீ சுப்பிரமணியர் கோயிலில் இருந்து தேர் ஊர்வலம் புறப்பட்டு மீண்டும் கோவிலுக்கு வந்து கொண்டிருந்தபோது வீதிக்கு மேல் அமைக்கப்பட்டிருந்த அதியுயர் மின்மார்க்க அமைப்பின் மின் கம்பியில் மோதியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். .



நேற்று முன்தினம் பிற்பகல் ஆரம்பமான ஊர்வலம் நேற்று காலை வரை நீடித்ததாகவும் பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நமுனுகுல பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# தற்கொலை என கூறப்பட்டது கொலை வழக்காக மாறியது!

## 10ஆவது மாடியிலிருந்து தள்ளிவிடப்பட்ட காதலன்

கொழும்பு, ஓக. 25

ரந்திய உயன அடுக்குமாடி குடியிருப்பில் காதலியை சந்திக்கச் சென்ற இளைஞன் 10ஆவது மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படும் சம்பவம் தற்கொலை அல்ல, கொலையே என விசாரணை நடத்திய பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் நேற்று முன் தினம் கைது செய்துள்ளனர்.

வீட்டுத் தொகுதியின் பத்தாவது மாடியில் உள்ள தனது காதலியின் வீட்டில் இளைஞன் கழுத்தை நெரித்து கொலை செய்யப்பட்டு மேல் மாடியில் இருந்து சடலம் வீசப்பட்டதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

முன்னதாக இளைஞனின் மரணம் தற்கொலை என அறிவிக்கப்பட்டதை அடுத்து அவரது சடலம் மாதம்பிட்டிய மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. நீதிமன்ற உத்தரவின் பின்னர் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனை நடத்தப்படும் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயிரிழந்த 21 வயதுடைய ஜே.மதுசங்கவும், அவரது காதலியும் ஐஸ் போதைக்கு அடிமையானவர்கள் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

யுவதியின் தாய் வெளிநாட்டில் இருப்பதாகவும், ரந்திய உயன பத்தாவது மாடியில் உள்ள வீட்டில் பாட்டி, 18 வயதான தனது சகோதரியுடன் அவர் வசித்து வருவதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த பெண்களுக்கு மூத்த சகோதரி ஒருவரும் உள்ளார். அவரும் வெளிநாட்டில் பணிபுரிகிறார். அவரது 2 குழந்தைகளும் அந்த வீட்டிலேயே தங்கியுள்ளனர்.

18 வயதுடைய சகோதரி கர்ப்பமாக இருப்பதாகவும், அவரது குழந்தையின் தந்தை யார் என்று தெரியவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது வெளிநாட்டிலுள்ள மூத்த சகோதரியுடன் முன்னர் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படும் 26 வயதுடைய இளைஞர் ஒருவர் அடிக்கடி வீட்டுக்குச் செல்வதுடன், அவரும் போதைப்பொருளுக்கு அதிக அடிமையாக இருந்துள்ளார்.

அந்த இளைஞருடனும், 18 வயதான யுவதிக்கு தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

கொலைச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் அன்றைய தினம் மதுசங்க இந்த வீட்டுக்குச் சென்றபோது 26 வயதுடைய இளைஞன் இருந்துள்ளார்.

இருவருக்கும் அங்கு வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, அந்த இளைஞன் மதுசங்கவை தாக்கி, துணியினால் கழுத்தை நெரித்து பின்னர் பத்தாவது மாடியில் இருந்து கீழே வீசியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

முன்னதாக மதுஷங்க ஜன்னல் வழியாக குதித்ததாக காதலி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். உயிரிழந்தவரின் உறவினர் ஒருவர் முறைப்பாடு செய்ததை அடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

மதுஷங்க தரையில் விழுந்த போது, அவரது கழுத்தில் துணி சுற்றப்பட்டிருந்த புகைப்படத்தை அந்த குடியிருப்பின் கீழிருந்த ஒருவர் எடுத்துள்ளார். அந்த புகைப்படத்தையும் முறைப்பாட்டாளர் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தார்.

பொலிஸார் மீண்டும் சிறுமியை விசாரித்தபோது, 26 வயது இளைஞன் கழுத்தை நெரித்தது தெரியவந்தது.

இந்த சம்பவத்தை வெளியில் சொல்லக்கூடாது என்றும், சொன்னால் தன்னையும் கொன்று விடுவேன் என அந்த 26 வயதானவர் மிரட்டியதாகவும் காதலி தெரிவித்தார்.

சந்தேக நபரை போலிஸார்ர் கைது செய்துள்ளனர். (அ)

# தபால் நிலையங்களை உடனே காப்பாற்றுங்கள்

## பொலிஸாரிடம் கோரும் அமைச்சர்

கொழும்பு, ஓக. 25

இந்த வருடம் நாடளாவிய ரீதியில் 14 தபால் நிலையங்கள் திருடர்களால் உடைக்கப்பட்டு சொத்துக்கள் திருடப்பட்டுள்ளதாக ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த தபால் நிலையங்களில் இருந்து கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபா திருடப்பட்டதாகத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், முத்திரைகள் மற்றும் ஏனைய பெறுமதியான சொத்துக்களும் திருடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இது தொடர்பில் பொது பாதுகாப்பு அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு அறிவித்து தபால் நிலையங்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

பொலிஸாரின் பார்வையில் உள்ள தம்புத்தேகம தபால் நிலையத்திலும் திருடர்கள் புகுந்துள்ளதாக சாந்த பண்டார குறிப்பிட்டார்.

கேகாலை மாவட்ட சபை உறுப்பினர் திருமதி ராஜிகா விக்கிரமசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

# விபத்தில் 4பேர் காயம்!




கொழும்பு, ஓக. 25

பொலன்னறுவையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த வாகனம் ஒன்று தம்புள்ளை குருநாகல் வீதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது வாகனத்தில் 5 பேர் பயணித்துள்ளனர்

இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# திஸ்ஸ விதாரண செயலாளராக பதவி வகிக்க தடை கிடையாது!

கொழும்பு, ஓக. 25

லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளராக பேராசிரியர் திஸ்ஸ விதாரண செயற்பட தடை விதிக்கக்கோரிய வழக்கை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று முன் தினம் நிராகரித்துள்ளது.

கட்சியின் செயலாளராக பதவியேற்றதாகக் கூறப்படும் டபிள்யூ. அபேசேன, திஸ்ஸ விதாரண செயலாளராக பதவி வகிக்க தடை விதிக்க கோரியிருந்தார்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம், திஸ்ஸ விதாரண செயலாளராக பதவிவகிக்க இடைக்காலத் தடை விதித்து ஜூலை 17ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தது.

தடை உத்தரவுக்கு எதிராக பேராசிரியர் திஸ்ஸ விதாரண முன்வைத்த உண்மைகளை பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான, தடை உத்தரவை கலைத்து இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பிக்க மறுத்தார்.

இதன்படி, கட்சியின் செயலாளராக பேராசிரியர் திஸ்ஸ விதாரண தொடர்ந்தும் பதவி வகிக்க முடியும். (அ)

# வி.ஐ.பிக்களின் பாதுகாப்புக்காக மட்டும் 7,000 பொலிஸார் கடமையில்!

கொழும்பு, ஓக. 25

விஐபிக்களின் பாதுகாப்புக்காக 7693 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட சபை உறுப்பினர் ஜகத் குமார கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்களில் 563 பேர் அமைச்சர்களுக்கும் 1811 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு பணி புரிகின்றனர்.

மேலும், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத உயரதிகாரிகளுக்காக 2176 அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஓய்வுபெற்ற ஜனாதிபதிகள், முன்னாள் பிரதி அமைச்சர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், ஆளுநர்கள், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர், முன்னாள் மத்திய வங்கி ஆளுநர், ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பல பிரிவுகள் பாராளுமன்ற உறுப்பினர் அல்லாத உயரடுக்கு பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(அ)

# கிளிநொச்சி வைத்தியசாலையிலும் நேற்று அடையாள வேலை நிறுத்தம்

கிளிநொச்சி, ஓக. 25

நாடளாவிய ரீதியில் அனைத்து வைத்தியசாலைகளிலும் நேற்று அடையாள வேலைநிறுத்தம் இடம்பெற்றது.

இதன்படி கிளிநொச்சி வைத்தியசாலையிலும் மருத்துவ பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

07 கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து வைத்தியசாலைகளிலும் மருத்துவப் பணியாளர்கள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினர்.

நேற்று காலை 8.00 மணி முதல் 24 மணித்தியாலங்களுக்கு வேலைநிறுத்தம் நடைபெற்றது.

# இலங்கையின் அபிவிருத்திகளுக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும்

## எஸ்.ஜெய்சங்கர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 25

**இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந்தியா தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் என அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காணொலிச் செய்தி மூலம் தெரிவித்துள்ளார்.**

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற இலங்கை இந்திய பாராளுமன்ற நட்புறவுச் சங்க கூட்டத்தின் போதே இந்திய வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே கூட்டத்தில் உரையாற்றுகையில், உணவு பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு, நாணய ஆதரவு மற்றும் நீண்ட கால முதலீடு ஆகிய நான்கு முக்கிய துறைகளில் இந்தியா-இலங்கை உறவுகள் மேலும்



மேம்படுத்தப்படும் என்று கூறினார்.

இந்த நிலையில் இலங்கை இந்திய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் ஊடாக பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய சபாநாயகர், இந்தியா வழங்கும் தொடர்ச்சியான ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார்.

இலங்கை இந்திய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா, அமைச்சர்கள், பாரா ளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர உட்பட அங்கத்தவர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# சிறுபோகம் பெரும் பாதிப்பு

கொழும்பு, ஓக. 25

இந்த ஆண்டின் சிறுபோகத்தில் 51,055.19 ஏக்கர் விளைநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் அதிக பயிர் சேதம் பதிவாகியுள்ளதாக விவசாய மற்றும் விவசாய பாதுகாப்பு சபை தெரிவித்துள்ளது.

அதன்படி பாதிக்கப்பட்டுள்ள வயல் நிலங்களின் அளவு 15,352.46 ஏக்கர்களாகும்.

சிறுபோகத்தில் ஏனைய செய்கைகள் முன்னெடுக்கப்பட்ட 424.70 ஏக்கர் விளைநிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக குறித்த சபை குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, சிறுபோகத்தில் பதிவான மொத்த விளைநிலங்களின் பாதிப்பு 514,79.89 ஏக்கர்களாக உள்ளது. (அ)

# எச்.ஐ.வி. தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 25

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த வருடம் எச்.ஐ.வி தொற்றாளர்களின் எண்ணிக்கை 48 சதவீதமாக அதிகரித்துள்ளதாக தேசிய பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டம் தெரிவித்துள்ளது.

15 முதல் 19 வயதுக்கு இடைப்பட்ட அதிகமானோர் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளாகின்றமை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இதுவரை நான்காயிரத்து நூறு எச்.ஐ.வி தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக எய்ட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டம் தெரிவித்துள்ளது. (அ)

# காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு ஆறு மாத காலத்துக்குள் நீதி வழங்கப்படும்!

கொழும்பு, ஓக. 25

இலங்கையில் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு 6 மாத காலத்திற்குள் நீதி வழங்கப்படும் என காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் தலைவர் சட்டத்தரணி மகேஷ் கட்டுலந்த தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம், காணாமல் போனவர்கள் தொடர்பான முதல் கட்ட விசாரணைகளை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் நிறைவு செய்துவிடும் என அவர் தெரிவித்தார்.

முதல் கட்ட விசாரணைகள் நிறைவடைந்தவுடன், காணாமல் போனவர்களின் சான்றிதழ்கள், அல்லது இறப்புச் சான்றிதழ்களைப் பெறத் தயாராக இருக்கும் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு உரிய சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அத்துடன் கொடுப்பனவுகளைப் பெற விரும்பும் உறவினர்கள், காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் மூலம் உரிய கொடுப்பனவுகளைப் பெறுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் காணாமல்போனவர்களின் எண்ணிக்கை 14,988 ஆக உள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# தொல்பொருளை சேதப்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

## அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 25

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இடம்பெறும் தொல்பொருள் அழிப்பு தொடர்பான, தகவல்கள் கிடைக்கப்பெற்று வருவதாக விடயத்துடன் தொடர்புடைய அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

தொல்பொருள் திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் சேதப்படுத்தல்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரதன தேரர், நேற்று பாராளுமன்றில்



எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே, அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

தொல்பொருள் பெறுமதி மிக்க இடங்களை சேதப்படுத்துவோருக்கு எதிராக, கட்டாயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில், பல வருடங்களாக தொல்பொருள் சின்னங்கள் பெருமளவில் அழிக்கப்படுகின்றமை அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வின்போது, தெரியவந்துள்ளதாக அவர் கூறினார்.

குருந்தூர் விகாரை தொடர்பில், இரு வேறு வழக்குகள் இடம்பெறுவதால், அது குறித்து எந்தவொரு கருத்தையும் தெரிவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர், விதுர விக்கிரமநாயக்க குறிப்பிட்டார். (அ)

# தங்க கடன் அடகுசேவைக்கு உச்சபட்ச வட்டி நிர்ணயம்!

கொழும்பு, ஓக. 25

தங்க கடன் அடகு சேவைக்கு இலங்கை மத்திய வங்கி உச்சபட்ச வட்டி வீதத்தை நிர்ணயித்துள்ளது.

இதற்கமைய அரச வங்கிகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற அனைத்து தனியார் வங்கிகளும் தங்க கடன் அடகு சேவைக்கு உச்சபட்சமாக 18 வீத வட்டியையே அறவிட முடியும் என மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கடன் அட்டைக்கு 28 வீதத்தையும், தற்காலிக மேலதிக பற்றுக்கு 23 வீதத்தையும் உச்சபட்ச வட்டியாக அறவிட முடியும் என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதேவேளை, கொள்கை வட்டி வீதங்களை தற்போதைய மட்டத்திலேயே தொடர்ந்தும் பேண இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

நேற்று மாலை கூடிய இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய துணைநில் வைப்பு வசதி வீதத்தை 11 சதவீதமாகவும், துணைநில் கடன் வசதி வீதத்தை 12 சதவீதமாகவும் தொடர்ந்தும் பேண தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# மின்னல் தாக்கியதில் சிறுவன் உயிரிழப்பு!

கொழும்பு, ஓக. 25

மின்னல் தாக்கி 10 வயதுடைய சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவம் மகியங்கனை - நவமெதகம - தெஹியத்த கண்டி பகுதியில் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 வயது சிறுவனும் அவரின் ஆறு வயது சகோதரனும் வயலிலுள்ள மரம் ஒன்றில் ஏறி விளையாடிக்கொண்டிருந்த நிலையில் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி மூத்த சகோதரன் உயிரிழந்துள்ளார்.

ஆறு வயது சிறுவன் கடுமையாக அதிர்ச்சிக்குள்ளாகிய நிலையில் மகியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# அரிசியை இறக்குமதி செய்ய அவசியமில்லை

கொழும்பு, ஓக. 25

வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தற்போது கையிருப்பில் உள்ள அரிசி, அடுத்த பெரும் போக அறுவடை வரை போதுமானதாக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகளுக்கு தேவையான மூன்று வகையான உரங்களை உரிய நேரத்தில் வழங்கியதாலும் நிதி உதவி அளித்ததாலும் கடந்த பெரும் போகம் வெற்றியளித்ததாகவும் அமைச்சர் கூறினார். (அ)

# இந்தியாவுக்கு ரணில் வாழ்த்து

கொழும்பு, ஓக. 25

நிலவின் தென் துருவத்தில் முதன்முதலாக விண்கலத்தை தரையிறங்கி சாதனைப்படைத்துள்ள இந்தியாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சாதனையை பார்த்து இலங்கை பெருமிதம் கொள்கிறது.

மனிதகுலத்துக்கு இந்திய பிரதமர் மோடி ஆற்றிய இந்த அர்ப்பணிப்பு, எதிர்கால சந்ததியினரை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை அடைய ஊக்குவிக்கும் என்றும்



ஜனாதிபதி கூறியுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இஸ்ரோ குழுமம் மற்றும் இந்திய மக்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். (அ)





நல்லூர் மூத்தவிநாயகர் ஆலய பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் புதன்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றவேளை...!

# தீவிரவாதத் தாக்குதல் குறித்து வெளிவரும் செய்திகளுக்கு அரசு பதிலளிக்கவேண்டும்!

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, ஓக. 25

**நாட்டில் தீவிரவாத தாக்குதல் இடம்பெற வாய்ப்புள்ளதாக உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களில் வெளியாகும் செய்திகளின் உண்மைத்தன்மையை அரசாங்கம் வெளியிட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசேட கூற்று ஒன்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்-

“கடந்த சில நாட்டின் மதங்கள், இனங்கள் இடையே முரண்பாடுகள் முற்றி கலவரங்கள் வெடிக்கப்போவதாகவும் தீவிரவாத தாக்குதல்கள் இடம்பெற வாய்ப்புகள் உள்ளதாகவும் புலனாய்வுத்துறை தெரிவித்ததாக சர்வதேச மற்றும் உள்நாட்டு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.



இதுமிகவும் அபாயகரமான விடயமாகும். நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாகும். உடனடியாக அனைத்துக் கட்சிகளையும், தரப்புகளையும் அழைத்து இது குறித்து கலந்துரையாடல்களை நடத்தவேண்டும்.

ஈஸ்டர் தாக்குதலுடன் இந்நாட்டில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு குழப்பம் காரணமாக இந்த உணர்வுபூர்வமான விடயம் தொடர்பில் அரசாங்கமும் பாராளுமன்றமும் கவனம் செலுத்துவதுடன் இது தொடர்பில் அனைத்து கட்சிகளுக்கும் பொறுப்பான தரப்பினருக்கும் தெரியப்படுத்த வேண்டும்-என்றார்.

(அ)

# கட்டாரில் வேலையின்றி இலங்கை இளைஞர்கள்!

கொழும்பு, ஓக. 25

கட்டாருக்கு வேலைக்குச் சென்று தொழில் வாய்ப்பு கிடைக்காத நிலையில் இரண்டு இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ள நிலையில், மேலும் 11 இளைஞர்கள் நாடு திரும்ப முடியாத நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாடு திரும்பியுள்ள இரு இலங்கையர்களும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துவிட்டு, வேலை செய்யும் இடத்தின் கடிதமோ அல்லது வேலைவாய்ப்பு ஒப்பந்தக் கடிதமோ இல்லாமல் கட்டாருக்கு பணிக்குச் சென்றுள்ளனர்.

நிக்கரவெரட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும் உள்ளூர் தரகரிடம் தலா 5 இலட்சம் ரூபா பணத்தினை கொடுத்து, ஜூன் மாதம் 17 ஆம் திகதியன்று கட்டாருக்குச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் கடந்த இரு மாதங்களாக கட்டாரில் தங்கியிருந்த நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் நாடு திரும்பியுள்ளனர்.

குறித்த இளைஞர்கள் தங்கியிருந்த விடுதியில் மேலும் 11 இலங்கை இளைஞர்கள் வேலையின்றி இருப்பதுடன்,மீண்டும் நாட்டுக்கு திரும்ப முடியாத நிலையில் கட்டாரில் சிக்கித்தவிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# விடுமுறையில் வந்து கொள்ளையில் ஈடுபட்ட கடற்படைச் சிப்பாய் கைது!

கொழும்பு, ஓக. 25

வீதியில் நடந்துச் சென்ற பெண் கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை கொள்ளையிட்ட கடற்படைச் சிப்பாயை தாம் கைது செய்ததாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நெடுந்தீவில் உள்ள கடற்படை முகாமில் கடமையாற்றி வரும் களுத்துறை வடக்கு பிரதேசத்தை சேர்ந்த 38 வயதான கடற்படை சிப்பாயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று முன்தினம் முதல் 7 நாள் விடுமுறையில் சொந்த ஊருக்கு வந்துள்ளமை அவரிடம் உள்ள ஆவணங்கள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

களுத்துறை வடக்கு, விஜேமான்ன வத்த பிரதேசத்தில் இருந்து தந்தைக்கு உணவைக் கொண்டு சென்று வழங்கி விட்டு, வீடு திரும்பிக்கொண்டிருந்த பெண்ணின் தங்கச்சங்கிலியையே சந்தேக நபர் கொள்ளையிட்டுள்ளார்.

இதனையடுத்து பிரதேச மக்களின் உதவியுடன் அவரை கைது செய்ததாக பொலிஸார் கூறியுள்ளனர்.

(அ)

# வைத்தியசாலைகளில் மயக்கவாயு தட்டுப்பாடு

கொழும்பு, ஓக. 25

நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் சத்திர சிகிச்சைக்கு முன்னர் நோயாளர்களுக்கு பயன்படுத்தப்படும் மயக்க வாயுக்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அகில இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஜயந்த பண்டார இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மயக்க வாயுக்கள் தட்டுப்பாடு காரணமாக நுவரெலியா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை இரண்டு நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், நுவரெலியா வைத்தியசாலையில் கடந்த இரண்டு நாட்களாக அவசர சத்திரசிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது”-என்றார். (அ)

# மாகாண பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இணைக்கும் அதிகாரம் மாகாண சபைக்கு?

கொழும்பு, ஓக. 25

மாகாண சபைகளுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளும் அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட எதிர்ப்பார்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதன்படி ,எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான பிரேரணையை பரிந்துரைப்பதாகவும் அவர் கூறினார்.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் இது தொடர்பிலான வர்த்தமானியை வெளியிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் ஓய்வுபெற்ற மற்றும் சேவையிலிருந்து வெளியேறியவர்களுக்குப் பதிலாக பட்டதாரிகள் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களை பணியமர்த்துவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம் உள்ளது.

இதேவேளை, விஞ்ஞானம், தொழிநுட்பம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் தொடர்புடைய 5,450 ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, இதுவரை 750 ஆசிரியர்கள் நியமிப்பது தொடர்பில் மத்திய மாகாண கல்வி அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது-என்றார்.

(அ)

# கஜேந்திரகுமாரின் இல்லத்தை சுற்றிவளைக்கச் சிலர் திட்டம்!

## சபையில் கூறினார் டிலான் பெரேரா

கொழும்பு, ஓக. 25

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின், கொழும்பு இல்லைத்தை நாளை (இன்று) சுற்றிவளைக்க சிலர் திட்டமிட்டுள்ளதாகவும் இதற்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் ஆதரவு வழங்கியுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா நேற்று சபையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காலையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை சந்தித்தேன். அதன்போது நாளை (இன்று) இடம்பெறவுள்ள செயற்குழுவில் தன்னால் பங்குபற்ற முடியாது என்றும், கொழும்பிலுள்ள தனது இல்லத்தை ஒருசிலர் சுற்றிவளைக்க திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அதில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் பங்குபற்றவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது பாரதூரமான பிரச்னையாகும். கஜேந்திர குமார் பாராளுமன்ற உறுப்பினர். எனவே, அவ்வாறானவொரு திட்டமிருந்தால் பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவிக்கவேண்டும்.

ஒவ்வொருவரும் நினைத்தப்படி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீட்டை சுற்றிவளைக்க இடமளிக்க முடியாது.

ஆகவே, அவருக்கும் அவரது இல்லத்துக்கான பாதுகாப்பை பலப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோருகிறேன்-என்றார்.

# வாழைச்சேனை விபத்தில் இளம் ஆசிரியர் மரணம்!

மட்டக்களப்பு, ஓக. 25

**வாழைச்சேனை - புணானை பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் ஆசிரியர் ஒருவர் மரணமானார்.**

இந்த விபத்துச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 12.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி கல்விக் கோட்ட ரிதிதென்னை இக்ராஹ் வித்தியாலயத்தில் ஆங்கிலப் பாட ஆசிரியரான இவர் ரிதிதென்னையிலிருந்து ஓட்டமாவடி நோக்கி தனது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது எதிரே வந்த பஸ் வண்டியில் மோதி சம்பவ இடத்தில் மரணமடைந்துள்ளார்.

அண்மையில் ஆங்கிலப் பாட ஆசிரியர் நியமனம் பெற்ற 25 வயதுடைய இவர் ஓட்டமாவடி - 3 ஆம் வட்டாரத்தில் வசித்து வந்த எஸ்.எச்.எம்.அஸாம் என்பவராவார்.

இவ் விபத்தில் பலத்த காயமடைந்த மற்றையவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மரணமடைந்த இளம் ஆசிரியரின் உடல் வைத்திய பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மட்டக்களப்பில் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திக்கான 'பாங்கிங் கிளினிக்'!



மட்டக்களப்பு, ஓக. 25

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் "பாங்கிங் கிளினிக்" நிகழ்வு நேற்று முன்தினம் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் பிரதேச செய லக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முயற்சியாளர்களுக்கு கடன் தொடர்பான ஆலோசனைகளை வழங்கும் நோக்கத்துடன் அரச, தனியார் வங்கிகள் மற்றும் ஏனைய தொழில் பயிற்சிக்கான நிறுவனங்கள் பங்கேற்று, தொழில் முயற்சியாளர்களையும் வங்கிகளையும் இணைத்து தொழில் முயற்சிக்கான கடன்கள் வழங்கப்பட்டன. இதில் நூற்றுக்கும் அதிகமான முயற்சியாளர்கள் கலந்துகொண்டனர்.

இதில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலர் பங்கேற்றனர். (அ)



## கஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் விநியோகம்

காரைதீவு, ஓக. 25

அவுஸ்திரேலியா கான்பரா றோட்டறிக்கழகம் இதுவரை 4.2 மில்லியன் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை கல்முனை றோட்டறிக் கழகத்திற்கு வழங்கியது.

கல்முனை றோட்டறிக்கழகம் கல்முனை கஷ்டப்பிரதேச மாணவர்களுக்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் மேலும் ஒரு தொகுதி அப்பியாசக் கொப்பிகளை வழங்கியுள்ளது.

மல்வத்தை கணபதிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலயம், மல்வத்த நாவலர் வித்தியாலயம், புதிய வளாத்தாப்பிட்டி, தாஹிறா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளுக்காக 195,000 ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு கல்முனை றொட்டறிக் கழக தலைவர் றொட்டேரியன் ஏஎல்ஏ. நாசர் தலைமையில் நடைபெற்றது.

இதற்கான நிதியுதவியை வழங்கிய கான்பரா றோட்டறிக் கழகத்தின் உறுப்பினர் றோட்டேரியன் ரவீந்திரன் கலந்து கொண்டு கொப்பிகளை வழங்கினார்.

மேலும் றொட்டேரியன் மு.சிவபாதசுந்தரம் சமூக சேவைப் பணிப்பாளர், முன்னாள் தலைவர் றொட்டேரியன் கு.திருச்செல்வம், மற்றும் றொட்டேரியன் எம். அமிர்தசங்கர் ஆகியோரும் பங்குபற்றினர். (அ)

# 80 பயன்தரு பழமரக்கன்றுகள் நடுகை களுவாஞ்சிக்குடியில்!

காரைதீவு, ஓக. 25

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் மரநடுகை நிகழ்வுகளில் ஒரு நிகழ்வாக பழமரத் தோட்டம் அமைக்கும் நிகழ்வானது நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் குருக்கள்மடம் அசீசி சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளரின் வழிகாட்டலில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு (கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - திட்டமிடல், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள்) வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக பிரதேச செயலக பிரிவில் பல மரநடுகை திட்டங்கள் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் பழமரத் தோட்டம் அமைக்கும் நிகழ்வானது அசீசி சிறுவர் இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது 80 பயன்தரு பழ மரக்கன்றுகள் (மா, தோடை, மாதுளை, கொய்யா) நடுகை செய்யப்பட்டது.



இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி. சத்யகௌரி தரணிதரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் த. நிர்மலராஜ், அருட்சகோதரர் ஜெகன், அருட்தந்தை அம்றோஸ், நன்னிலம் நிறுவனத்தின் உறுப்பினர் சிந்துஷா, கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் (திட்டமிடல்) மற்றும் சிறுவர் இல்ல மாணவர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் சிறப்பான முறையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வினை பிரதேச செயலக உத்தியோகத்தர்களான ப. ராஜதிலகன் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்) மற்றும் வ. பிரசாந்த் ( வெளிக்கள இணைப்பாளர்- விதாதா) ஆகியோர் இணைந்து செயற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உலக உணவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு நலனுதவிகள் வழங்கல்

மட்டக்கலப்பு, ஓக. 25

உலக உணவுத் திட்டத்தினூடாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வவுனதீவு, கிரான் மற்றும் ஏனைய பிரதேச மக்களுக்கான நலனுதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன.

இதனடிப்படையில் மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவில் உலக உணவுத் திட்டத்தின் மூலம் விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு பெறுமதியான விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எஸ். சுதாரன் தலைமையில் இடம் பெற்றது. இதன்போது சிறிய ரக களை நீக்கும் உழவு உயந்திரங்கள் 08, நிலக்கடலை கோது நீக்கி இயந்திரங்கள் 04, விவசாயத்திற்கான நீர் குழாய்கள் போன்றவை



வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, இலங்கைக்கான உலக உணவு திட்ட பணிப்பாளர் அப்துல் ரகிம் சித்திக்கி மற்றும் ஜனாதிபதி செயலக உலக உணவுத் திட்ட பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுலக்சன ஜயவர்த்தன ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ஆயித்தியமலை 4ஆம் கட்டை பிரதேசத்தில் சுமார் 25 இலட்சம் பெறுமதியிலான ஐஸ் கட்டிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை அதிதிகளினால் திறந்து வைக்கப்பட்டது.

இதனூடாக இரவு நேரங்களில் பிடிபடும் மீன்களை சேகரிப்பதற்கான வசதிகள் இத் தொழிற்சாலையினால் செய்து கொடுக்கப்படுவதுடன், பெருமளவான மீனவ குடும்பங்கள் நன்மை பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மாற்றுத்திறனாளிகள் மற்றும் நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள், கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்கள், சமுர்த்திப் பயனாளிகள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைக் கொண்ட குடும்பங்கள் என்பவற்றிற்கு உலர் உணவு பொருட்கள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் 24 கிலோ அரிசி, 20 கிலோ பருப்பு மற்றும் 5 லீற்றர் சமையல் எண்ணெய் உள்ளடங்கிய உணவுப்பொதி 297 குடும்பத்தினருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், பின்தங்கிய பிரதேசங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் போசாக்கு நிலைமையை கருத்திற் கொண்டு அவர்களுக்கான சத்துணவுகள் மற்றும் திரிபோசா என்பனவும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு கிரான் பிரதேச செயலக பிரிவில் புலிபாய்ந்த கல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வளாகத்தில் பிரதேச செயலாளர் எஸ்.ராஜபாபு தலைமையில் இடம்பெற்றது. (அ)

### புடினுக்கு எதிராக கலகம் செய்த

# வோக்னர் கூலிப்படை தலைவர் விமான விபத்தில் உயிரிழப்பு!

மொஸ்கோ, ஓக. 25

**ரஷ்யாவின் தனியார் இராணுவமான வோக்னர் குழுவின் தலைவர் எவ்ஜெனி பிரிகோஜின் உள்ளிட்ட 10 பேர் விமான விபத்தில் உயிரிழந்துள்ளனர்.**

**மொஸ்கோவில் இருந்து செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நோக்கி பயணித்த போது விபத்துக்குள்ளான விமானத்தில் பயணித்த 10 பேரில் பிரிகோஜினும் ஒருவர் என ரஷ்யாவின் ஏவியேஷன் ஏஜென்சி ரோசாவியாட்சியா தெரிவித்துள்ளது.**

ட்வெர் பிராந்தியத்தில் உள்ள குஷென்கினோ கிராமத்திற்கு அருகே புதன்கிழமை விமானம் விபத்துக்குள்ளானதாக ரஷ்யாவின் அவசர சூழ்நிலை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் நேரப்படி மாலை 6:19 மணிக்கு (15:19 GMT) விமானம் "திடீரென்று கீழ் நோக்கி செங்குத்தாக" சென்றதாக **Flightradar24** இன் இயன் பெட்செனிக் தெரி வித்தார்.

சுமார் 30 வினாடிகளுக்குள், விமானம் 28,000 அடி உயரத்தில் இருந்து 8,000 அடிக்கு மேல் சரிந்தது.

ரஷ்யா சார்பு தொலைக் காட்சி நிலையமான சர்கார்ட் அதன் சொந்த ஆதாரங்களை மேற்கோள் காட்டி, பிரிகோஜின் உடல் தற்காலிகமாக அடையாளம் காணப்பட்டுள்ளது, ஆனால் டி.என்.ஏ பகுப்பாய்வு இன்னும் நிலுவையில் உள்ளது என்று தெரிவித்துள்ளது.



ப்ரிகோஜினின் வோக்னர் கூலிப்படையுடன் இணைந்த கிரே சோன் டெலிகிராம் சேனல், விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக கூறியது. ஆனால் அதன் கூற்றை ஆதரிக்க எந்த ஆதாரமும் இல்லை.

வோக்னர் குழுவின் உயர் தளபதி டிமிட்ரி உட்கினும் விமானத்தில் இருந்ததாக கூறப்படுகிறது.

விபத்திற்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் ஆனால் என்ன நடந்திருக்கலாம் என்பது குறித்து எந்த ஆரம்பக் கோட்பாட்டையும் வழங்கவில்லை என்று ரஷ்யாவின் விமானப் போக்குவரத்து ஆணையமான ரோசாவியட்சியா கூறியது.

ஒரு காலத்தில் விளாடிமிர் புடினின் நெருங்கிய உதவியாளராக இருந்த ப்ரிகோஜினின், அண்மையில் திடீர் கலகம் மேற்கொண்டார். இது தோல்வியில் முடிந்தது. ப்ரிகோஜினும் புடினும் 1990களில் இருந்து ஒருவரையொருவர் அறிந்திருக்கிறார்கள். "புடினின் சமையல்காரர்" என்ற புனைப்பெயர் பெற்றார்.

பிரேசிலியன் எம்ப்ரேயர் எக்சிகியூட்டிவ் ஜெட் மொடலில் பிரிகோஜின் பயணித்ததாகக் கூறப்படுகிறது. இந்த வகை விமானங்கள் 20 ஆண்டுகளுக்கும் மேலான சேவையில் ஒரே ஒரு விபத்தை மட்டுமே பதிவு செய்துள்ளதாக சர்வதேச விமானப் போக்குவரத்து தலைமையக இணையத்தளம் தெரிவித்துள்ளது. (அ)

# ரஷ்யா விமானப்படையின் தலைவர் பதவி இழந்தார்!



மொஸ்கோ, ஓக. 25

ரஷ்யாவின் முன்னணி இராணுவப் பிரமுகர்களில் ஒருவரான ஜெனரல் செர்ஜி சுரோவிகின், பொதுமக்களின் பார்வையில் இருந்து காணாமல் போனதாக பல வாரங்களாக ஊகங்களுக்குப் பிறகு, விமானப்படைத் தலைவர் பதவியை இழந்ததாகக் கூறப்படுகிறது.

ஒரு ஆதாரத்தை மேற்கோள் காட்டி அவர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டதாக ரியா நோவோஸ்டி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பல மாதங்கள் ஜெனரல் சுரோவிகின் உக்ரைன் மீதான ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பிற்கு பொறுப்பாக இருந்தார், ஆனால் ஜூன் மாதம் வாக்னர் கலகத்திற்குப் பிறகு அவரைக் காணவில்லை.

அவரது நீக்கம் கிளர்ச்சிக்கு முந்தையது என்று பார்வையாளர்கள் நம்புகின்றனர்.

குறிப்பாக ஒரு ரஷ்ய அறிக்கை பாதுகாப்பு அமைச்சக ஆதாரத்தை மேற்கோள் காட்டியது, அவர் ஒரு புதிய வேலைக்கு மாற்றப்பட்டதால் அவர் பணி நீக்கம் செய்யப்பட்டதாகவும், அவர் இப்போது குறுகிய விடுமுறையில் இருப்பதாகவும் கூறினார்.

விண்வெளிப் படைகளின் தலைவராக அவரது பங்கை விமானப்படைத் தலைவர் ஜெனரல் விக்டர் அஃப்சலோவ் ஏற்றுக்கொண்டார் என்று ரியா நோவோஸ்டி மேலும் கூறுகிறார். (அ)



# ரஷ்ய அணு ஆயுத விமானங்களை அழித்ததாகக் கூறுகிறது உக்ரைன்!

கீவ், ஓக. 25

உக்ரேனியப் படைகளால் ரஷ்ய விமானநிலையங்கள் மீதான சமீபத்திய தாக்குதல்களில் அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் இரண்டு ரி.யு-22 குண்டுவீச்சு விமானங்களை அழித்ததோடு மேலும் இரண்டையும் சேதப்படுத்தியதாக உக்ரைனின் புலனாய்வுத் தலைவர் கூறினார்.

நோவ்கோரோட் பிராந்தியத்தில் உள்ள சோல்ட்ஸி இராணுவ விமானநிலையத்தின் மீதான தாக்குதலில் அணுசக்தி திறன் கொண்ட ரி.யு-22எம்3 சுப்பர்சோனிக் நீண்ட தூர குண்டுவீச்சு விமானத்தை ரஷ்யா இழந்திருக்க வாய்ப்புள்ளதாக ஐக்கிய இராச்சியத்தின் இராணுவ உளவுத்துறை தெரிவித்திருந்தது.

"இரண்டு அழிக்கப்பட்டது, இரண்டு சேதமடைந்தன. இரண்டை சரிசெய்ய முடியாது," என்று உக்ரைன் உளவுத்துறை தலைவர் கைரிலோ புடானோவ் புதன்கிழமை இரவு ஒரு தொலைக்காட்சி பேட்டியில் கூறினார்.

ஐந்தாவது ரஷ்ய விமானம் தாக்குதல்களில் தாக்கப்பட்டிருக்கலாம் என்று புடானோவ் கூறினார்.

"இவர்கள் ரஷ்ய பிரதேசத்தில் இருந்து சில பணிகளைச் செய்தவர்கள்," என்று அவர் விமானங்களை அழித்த தாக்குதல் நடத்தியவர்களைப் பற்றி கூறினார்.

சனிக்கிழமையன்று சோல்ட்ஸி விமானநிலையத்திலும், திங்களன்று கலுகா பகுதியில் உள்ள ஷைகோவ்கா விமானநிலையத்திலும் ட்ரோன் தாக்குதல்கள் நடந்ததாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர். முதல் தாக்குதலின் போது ஒரு போர் விமானம் சேதமடைந்ததாக ரஷ்யா தெரிவித்துள்ளது. (அ)

# வோக்னர் தலைவரின் மரணத்தின் பின்னணியில் புடின் இருக்கலாம்!

## ஜோ பிடன் கூறுகிறார்



நியூயோர்க், ஓக. 25

வோக்னர் தலைவர் எவ்ஜெனி பிரிகோஜின் கொல்லப்பட்ட விமான விபத்துக்குப் பின்னால் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இருந்திருக்கலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் தெரிவித்தார்.

"ரஷ்யாவில் புடின் பின்னால் இல்லாத விஷயங்கள் எதுவும் இல்லை. ஆனால் அதற்கான பதிலைத் தெரிந்துகொள்ளும் அளவுக்கு எனக்குத் தெரியவில்லை, "என்று பிடன் செய்தியாளர்களிடம் கூறினார்.

மொஸ்கோவிலிருந்து செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கிற்குச் செல்லும் விமானத்தில் பிரிகோஜின் இருந்ததாக ஊடகங்கள் தெரிவித்த சிறிது நேரத்திலேயே பிடனுக்கு இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டது.

ஒரு கட்டத்தில் புடினின் நெருங்கிய நம்பிக்கைக்குரிய கூலிப்படைத் தலைவர், கடந்த வாரத்தில் ஆபிரிக்காவில் இருந்து ஒரு வீடியோவில் தோன்றினார். ஜூன் மாதம் ரஷ்ய இராணுவத்திற்கு எதிரான ஒரு தோல்வியுற்ற கிளர்ச்சிக்குப் பிறகு, பிரிகோஜின் நாட்டை விட்டு வெளியேறினார்.

ப்ரிகோஜினின் மரணம் பற்றிய அறிக்கைகள் துல்லியமாக இருந்தால் ஆச்சரியப்பட மாட்டோம் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

தனியார் ஜெட் விமானத்தை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் சுட்டு வீழ்த்தியதாக வாக்னருடன் இணைந்த ஊடகங்கள் கூறின.

"நாங்கள் அறிக்கைகளைப் பார்த்தோம். உறுதிப்படுத்தப்பட்டால், யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை, "என்று வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தித் தொடர்பாளர் கூறினார். (அ)

# புகுஷிமா அணு மின் நிலைய கதிரியக்க நீரை கடலில் வெளியேற்றத் தொடங்கியது ஜப்பான்!

ரோக்கியோ, ஓக. 25

பல நாடுகளின் எதிர்ப்பையும் மீறி புகுஷிமா அணு மின் நிலையத்தின் கதிரியக்க நீரை கடலில் வெளியேற்றும் நடவடிக்கையை ஜப்பான் ஆரம்பித்துள்ளது.

2011-இல் ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமி காரணமாக புகுஷிமா அணு மின் நிலையத்திற்குள் கடல் நீர் புகுந்தது. இதனால் அங்கு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால், அணு உலைகளை குளிர்விக்கும் இயக்கம் நின்று போனது. இதனையடுத்து, அந்த மின் நிலையத்தின் 3 அணு உலைகள் உருகின.

இந்த விபத்திற்கு பிறகு அணு உலைகளில் இருந்து கதிரியக்க நீர் வெளியேறியது. அதனை பெரிய தொட்டிகளில் அதிகாரிகள் தேக்கி வைத்தனர்.

சுத்திகரிக்கப்பட்டுள்ள அந்த நீரை கடலில் கலக்க ஜப்பான் அரசு முடிவு செய்த நிலையில், ஜப்பான் சென்று அந்த நீரை ஆய்வு செய்த ஐ.நா. அணுசக்தி பாதுகாப்பு அமைப்பின் நிபுணர்கள், அதனை கடலில் கலப்பது பாதுகாப்பானதுதான் என்று கூறினர்.

எனினும், புகுஷிமா அணு உலை நீரை கடலில் கலப்பதற்கு சீனா, தென் கொரியா போன்ற நாடுகள் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

எனினும், புகுஷிமா அணு உலையில் தேக்கி வைக்கப்பட்ட கதிரியக்க நீரை, சுத்திகரித்து கடலில் வெளியேற்றும் நடவடிக்கை இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# தரமான சுகாதார சேவையை வழங்குவதில் அரசு தோல்வி!

## சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 25

**“மனித வளங்களை முறையாக நிர்வகிக்காத காரணத்தால் சுகாதார கட்டமைப்பு சீர்குலைந்து போகும் அபாயம் உள்ளது. ஏற்கனவே பணிபுரியும் மருத்துவர்கள் முன்னறிவிப்பின்றி நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். வெளிநாட்டில் படிக்கும் விசேட மருத்துவர்கள் நாடு திரும்புவதாக இல்லை. விசேட வைத்தியர்கள் உட்பட வைத்தியர்களின் பற்றாக்குறை நாட்டில் ஏற்பட்டுள்ளது. இதற்கு விரைவான தீர்வை வழங்க தவறினால் தரமான சுகாதார சேவையை வழங்குவதில் அரசு தோல்வியடையும்.”**

**-இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சரிடம் கேள்வி எழுப்பு கையிலேயே சஜித் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மனித வளங்களை முறையாக நிர்வகிக்காததால் சுகாதார அமைப்பு சீர்குலைந்து போகும் அபாயம் உள்ளது. ஏற்கனவே பணிபுரியும் மருத்துவர்கள் முன்னறிவிப்பின்றி சேவையில் இருந்து விலகியுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தற்போது வெளிநாடுகளில் பயிற்சி பெற்றுவரும் விசேட மருத்துவ நிபுணர்கள் இலங்கையின் நிரந்தர சேவையில் இணையாமல் முழுநேரமாக வெளிநாட்டில் பணிபுரிவதாலும், புதிய மருத்துவர்கள் சுகாதார அமைச்சில் இணைந்து பணியாற்ற மறுப்பதாலும், பட்டப் பின் படிப்பை கற்காத காரணத்தால் இந் நாட்டில் விசேட மருத்துவர்கள் உட்பட மொத்த மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதற்கான விரைவான தீர்வுகளை வழங்க அரசாங்கம் முன்வராவிட்டால், நாடளாவிய ரீதியில் தரமான சுகாதார சேவைகளை சமமாக வழங்குவதில் சிக்கல் ஏற்படும். எனவே, மருத்துவர்களின் சேவையில் திருப்தியை ஏற்படுத்தும் வகையில் அவசர வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும்.

மற்றொரு தீவிர பிரச்னை உள்ளது. மெனிங்கோகொக்கல்



தடுப்பூசி இன்று நாட்டில் இல்லை. 12 மாதங்களுக்கு இல்லை என்று கூறப்படுகிறது. இது ஒரு குறைபாடு. எமக்குக் கிடைத்த தகவலின்படி, அது இன்றும் தட்டுப்பாடாக உள்ளது. இது ஹஜ் புனித பயணத்திற்காகச் செல்பவர்களுக்கு இது ஒரு முக்கியமான விடயம் என்பது உங்களுக்குத் தெரியும். இது அவர்களுக்கு கட்டாயமாகும். இந்தக் குறைபாட்டை தீர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

காலி சிறைச்சாலையில் தொற்றுநோய் பரவியுள்ளது. நாம் கேள்விப்பட்டபடி, தடுப்பூசி உலக சுகாதார நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளதாம். ஆனால் சுகாதார அமைச்சு அதை எடுக்க முயற்சிக்கவில்லையாம் என்றும் கேள்விப்பட்டோம். இதைப் பற்றி உடனடியாக பதில் சொல்ல முடியாவிட்டாலும் நாளைக்கு பதில் சொன்னாலும் பரவாயில்லை.

அதனால்தான் இன்று சபாநாயகர் சபையில் இல்லாத நேரத்தில் நடந்த சம்பவத்துக்கு இரண்டு எம்.பி.க்களை சபைக்கு வரக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற முடிவுகளை நடைமுறைப்படுத்துவதில் எப்போதும் ஒரே மாதிரியான முடிவா எடுக்கப்படுகின்றது. என்று கேட்க விரும்புகிறேன். துறைமுகத்தில் 13 ஏக்கர் குறைந்த விலைக்கு விற்கப்பட்டுள்ளதாக இந்த அரசாங்கத்தின் உறுப்பினர் ஒருவர் கூறுகிறார்.

கழிவு உர அறிக்கை ஒரு வருடமாக கோப் குழுவில் விவாதிக்கப்படவில்லை. அரசின் பணத்தைத் திருடியவர்கள் நன்றாகச் செய்கிறார்கள். மேலும், ஒரு மக்கள் பிரதிநிதி ஒரு அலுவலரின் பெயரைக் குறிப்பிட்டார். அதிகாரி என்ற அலுவலர் மீது அபத்தமான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அப்படிப்பட்ட நல்ல அலுவலர்களை பாதுகாக்கத்தான் நாங்கள் இருக்கிறோம். செயலாளர் நாயகத்துக்கும் மற்றும் பிற அலுவலர்களுக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு இடமளிக்கமாட்டோம்.

நாங்கள் நன்றாக அவதானத்துடன் இருக்கிறோம். பழிவாங்கல் நடவடிக்கையை அனுமதிக்க முடியாது. மேலும் இந்த சபையில் கேள்வி கேட்டால் ஓடி விடுகிறார்கள். பதில் சொல்ல முதுகெலும்பு இல்லை. பயம் இந்த கோழைகளிடம் பதில் சொல்லுமாறு கேட்டுக் கொள்கின்றேன். சுகாதார அமைச்சர் கேட்கும் இந்தக் கேள்விகள் பற்றிய தகவல் உங்களுக்கும் உங்களுக்குக் கீழ் உள்ள அதிகாரிகளுக்கும் தெரியாவிட்டால் சுகாதாரத்துறையை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்-என்றார். (அ)

# உணவுப்பொருள்களை விருப்பமில்லாது இறக்குமதி செய்யவேண்டிய நிலைமை

கொழும்பு, ஓக. 25

பொதுமக்களின் உணவுத் தேவைக்காக உணவுப் பொருட்களை விருப்பமில்லாமல் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வர்த்தக அமைச்சில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இந் தவிடயத்தை கூறினார்.

விவசாயம் தொடர்பான விழிப்புணர்வு வேலைத்திட்டம் ஒன்று தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த வேலைத்திட்டத்தினூடாக வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கப்பெறும் சலுகைகள் போதியளவில் இல்லை.

இந்தநிலையில் வாடிக்கையாளர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளது.

இதன்காரணமாக வாடிக்கையாளர்களை கருத்திற் கொண்டு உணவுப்பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டியநிலை ஏற்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார். (அ)

# மலையக நீர்த்தேக்கங்கள், ஆறுகள் நீர்மட்டம் சடுதியாகக் குறைவடைவு

கொழும்பு, ஓக. 25

நாட்டில் நிலவும் கடும் வறட்சியால் மலையகத்திலுள்ள நீர்த்தேக்கங்கள், ஆறுகள் மற்றும் குளங்களின் நீர் மட்டம் சடுதியாக குறைவடைந்து வருகின்றது. சில பகுதிகளில் குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன், விவசாய நடவடிக்கைகளுக்கு நீரை பெறுவதில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடும் வறட்சியால் தேயிலை விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளது, கடும் சிரமத்துக்கு மத்தியிலேயே கொழுந்து கொய்து வருவதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வறட்சியான காலநிலையால் காசல்ரீ மற்றும் மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் மேலும் குறைவடைந்துள்ளது.

அத்துடன், மவுஸ்ஸாக்கலை நீர்தேக்கம் அமைக்கும்போது நீருக்குள் சங்கமமான பழைய மஸ்கெலியா நகரத்தின் இருப்பிடங்கள், புராதன கோயில், விகாரை, பாலங்கள் உட்பட பல்வேறுப்பட்ட ஞாபக சின்னங்கள் தற்போது வெளியில் தோன்றுகின்றன. பெருமளவானவர்கள் இதனை பார்வையிட்டும் வருகின்றனர்.

அதேவேளை, மலையகத்தில் குறிப்பாக நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் மனித செயற்பாடுகளால் காட்டு தீ சம்பவங்களும் அதிகரித்துள்ளன. (அ)

# இந்தியாவின் சந்திரயான் சாதனைக்கு இலங்கை பாராளுமன்றத்தில் வாழ்த்து

கொழும்பு, ஓக. 25

இந்தியாவின் சந்திரயான்-3 விண்கலம் நிலவில் வெற்றிகரமாக நேற்று முன் தினம் தரையிறங்கியது. இதற்கு இலங்கை பாராளுமன்றத்தில் நேற்று வாழ்த்தும், பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

பாராளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் தலைமையில் கூடியது.

இதன்போது “எமது அண்டைநாடு என்ற வகையில் இந்தியாவின் இந்த சாதனைக்கு எமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.” - என்று எதிர்க்கட்சி தலைவர் கூறினார். இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கும் பாராட்டு தெரிவித்தார்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவும் வாழ்த்து தெரிவித்தார். (அ)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் 30 ஆம் திகதி மன்னாரில் ஆர்ப்பாட்டம்

மன்னார், ஓக. 25

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை ஒன்றிணைத்து எதிர்வரும் 30 ஆம் திகதி மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரும் கலந்துகொண்டு பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி கோரி எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை காலை மன்னாரில் மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளோம். வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை மன்னாரில் முன்னெடுக்க உள்ளோம். இந்த ஆர்ப்பாட்டம் மன்னார் ‘சதொச” மனித புதைகுழியிலிருந்து ஆரம்பித்து பவனியாக மன்னார் நகர சபை பொது விளையாட்டு மைதானத்தைச் சென்றடையும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி 14 வருடங்களாக நீதிக்காக போராடும் தாய்மார்களின் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கக் கேட்டுக்கொள்கிறோம். தமிழ் தேசியத்தில் பணிபுரியும்-தமிழ் தேசியத்தை நேசிக்கும்-அனைவரும் எங்களுடன் கைகோர்க்கவேண்டும்-என்றார். (அ)

# மடுப் பிரதேசத்தில் மாத்திரம் 3,244 பேர் வறட்சியால் பாதிப்பு!

மன்னார், ஓக. 25

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக வறட்சியான காலநிலை நிலவி வருகின்றமையினால் பொதுமக்கள் உட்பட கால்நடைகள் பாதிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக சில இடங்களில் குடிதண்ணீருக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் தகவலின் பிரகாரம் மன்னார் மாவட்டத்தில் வறட்சி காரணமாக மடுப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பல கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதிலும் மடு பிரதேச செயலர் பிரிவில் உள்ள மல்லவராஜன், கட்டையடம்பன்,மாதா கிராமம்,பெரிய முறிப்பு, இரணை இலுப்பகுளம்,கீரிசுட்டான் போன்ற பகுதிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வறட்சி காரணமாக குறித்த கிராமங்களை சேர்ந்த 952 குடும்பங்களைச் சேர்ந்த 3244 நபர்கள் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவு கூறியுள்ளது.

இந்த நிலையில் இவ் வறட்சியான காலநிலை தொடரும் பட்சத்தில் பாதிக்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ)

# தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் எந்தவொரு எம்.பியும் கேட்கவேயில்லை!

கொழும்பு, ஓக. 25

எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் தீர்வையல்லா வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கவில்லை என பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் வெளியிடப்படும் கருத்துக்கள் உண்மைக்கு புறம்பானது என அவர் பாராளுமன்றில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்வையல்லா வாகன உரிமம் கோரியுள்ளதாக கடந்த சில நாட்களாக பல்வேறு தகவல்கள் வெளியாகியிருந்தன இது தொடர்பில் நிதியமைச்சு மற்றும் அந்த அமைச்சின் அதிகாரிகள் எந்தவொரு கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை என பதில் நிதியமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். (அ)

## மன்னாரில்...

எம். எம். ரக கைத் துப்பாக்கி பயன் படுத் தப்பட்டமை பொலிஸாரின் விசாரணை யில் தெரிய வந்தது. 2009 ஆம் ஆண் டுக்கு பின்னர் வடக்கில் இடம்பெற்ற துப்பாக்கிசூட்டு சம்பவங் களில் நவீனரக துப்பாக்கி பயன்படுத்தப் பட்டிருப்பதில் இது முதல் சந்தர்ப்பமா கக் கருதப்படு கின்றது. இதனால், இந்த விடயத்தில் பாதுகாப்பு தரப்பு அதிக கவனம் செலுத்தியுள்ளது.

இதனிடையே, கொல்லப்பட்ட வர்களில் ஒருவர் கடந்த வருடம் மன் னார் - நொச்சிக்குளத்தில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப் பட்டவராவார். இதனால், இந்தக் கொலை பழிவாங்கும் நோக்கில் நடத் தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மற்றைய நபர் பிணை யில் வெளிவந்த நபருடன் பயணித்த நிலையில் சுட்டுக்கொல்லப் பட்டிருக்க லாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

## வடமராட்சியில்...

டிப்பருக்குள் அகப்பட்டு இழுத்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் தீப்பற்றி எரிந்தது. இதில், கொற்றாவத் தையைசேர்ந்த சாகித்தியன் (வயது 14) என்ற சிறுவன் உயிரிழந்தார். (ஐ)

முல்லைத்தீவை சேர்ந்தவரும் தற் போது கொற்றாவத்தையில் வசிப்பவ ருமான அஜந்தன் (வயது 21 என்ற இளை ஞர் படுகாயமடைந்த நிலையில் பருத் தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்துக் குறித்து வல்வெட்டித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ- 02- 03)

## இந்திய...

ஆகியவற்றை நடைமுறைப்படுத்த இரு நாடுகளும் உயர்மட்டத்தில் ஒப்புக் கொண்டுள்ள நிலையில் இந்தப் பயணம் நிகழ்வதால் அது முக்கியத் துவம் பெறுகிறது.

அவரின் இந்தப் பயணத்தின்போது திருகோணமலைக்கும் அவர் பயணம் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின் றது.

சீன கப்பலான 'ஷி யான் 6' இலங்கை வருவதற்கு அனுமதி கோரியுள்ளது. இது தொடர்பில் இந்தியா தனது கரிச னையை வெளியிட்டிருந்தது. இந்த நிலையில், இந்திய பாதுகாப்பு அமைச்ச ரின் இலங்கை பயணம் முக்கியத்துவம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தண்ணீரை...

குடும்பங்கள் குடிதண்ணீர் தட்டுப் பாட்டை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாக, நெடுந்தீவு, ஊர்காவற் துறை, சாவகச்சேரி, மருதங்கேணி, சங்கானை பிரதேச செயலக மக்களே வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட் டுள்ளனர்.

இந்தப் பகுதிகளுக்கு அனர்த்த முகாமைத்துவ சேவை நிலையம் ஊடாக குடிதண்ணீர் வழங்கப்படுகின்றது.

தற்போதுள்ள அனர்த்த நிலைமை களை கருத்தில் கொண்டு யாழ்ப்பா ணத்தில் தண்ணீரை சிக்கனமாக பொதுமக்கள் பயன்படுத்த வேண்டும்.

இதேபோன்று, விவசாயதுறையில் பாதிக்கப்படுவோர் சம்பந்தமாகவும் அவர்களுக்கான நிவாரணம் தொடர்பி லும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எனினும், விவசாயிகளிடமிருந்து எந்த விண்ணப்பமும் கிடைக்கவில்லை.

கிணறுகளில் தண்ணீர் வற்றிச் செல் கின்றது. எனவே, பிரதேச செயலகங்கள் ரீதியாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தொடர்பாக கணக்கெடுப்பு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

## பாதுகாப்பு...

போன்ற விசயங்கள் குறித்து சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படும் கருத்துகளுக்கு அரசாங்கம் பதிலளிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

சில பிரதேசங்களில் அரசியல் ஆதரவு டன் சில குழுக்கள் இன முரண்பாடு களை தூண்ட முயற்சிப்பதை நாட்டின் புலனாய்வுப் பிரிவினர் அவதானித்துள் ளனர். அரசாங்கமும் படையினரும் இந் தக் குழுக்கள் மீது கவனம் செலுத்தி வரு கின்றன என்றும் அவர் மேலும் கூறினார்.

## பிரதான...

வவுனியா - தோணிக்கல்லில் கடந்த மாதம் பிறந்த நாள் நிகழ்வு இடம்பெற்ற வீட்டுக்குள் நுழைந்த அடையாளம் தெரி யாத சிலர் அங்கு வாள்வெட்டு தாக்கு தலை மேற்கொண்டதுடன் வீட்டுக்கு தீ வைத்தனர்.

இதில் தம்பதியர் இருவர் உயிரிழந்த னர். வேறு சிலர்காயமடைந்தனர்.

இது தொடர்பான விசாரணையில் ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர்.

இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள வவுனியா சிறைச்சாலையில் மேற்கொள் ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது பிரதான சந்தேகநபரிடம் இருந்து கைபேசி ஒன்று மீட்கப்பட்டது.

அந்த கைபேசியிலிருந்து 3 ஆயிரத்து 292 அழைப்புகள் வெளிச்சென்றுள்ள னர். சந்தேகநபர் 35 தடவைகள் பெண் ஒருவருக்கு அழைப்பு எடுத்தமை தெரிய வந்துள்ளது.

நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய சி. ஐ. டியினர் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

## அரசாங்கத்தை...

தெரிவித்தார்.

மேலும், அண்மைக்காலமாக குருந் தூர்மலை பிரச்சை அடிப்படையாகக் கொண்டு இனப்பிரச்சை தூண்டும் வித மாக சிலர் கருத்துக்களை வெளியிடுவது மற்றும் செயற்பாட்டு ரீதியாக தலையிடு வது என்பவற்றை நாம் காண்கிறோம். மட்டகளப்பில் காணிப்பிரச்னையை அடிப்படையாகக்கொண்டு இரண்டு இனங்களுக்கு இடையில் மோதலை உரு வாக்கும் வகையில் தூண் டுதல் மேற் கொள்வதை அவதானிக்க முடிகிறது.

மேலும் நாட்டின் இனங்களுக்கு இடையில் மோதல் ஏற்படலாம் என இந்திய புலனாய்வு பிரிவினர் தெரிவித்தி ருக்கிறார்கள். இந்த அறிவிப்புகள் மற் றும் கடந்த வாரம் இடம்பெற்ற சம்ப வங்களை பார்க்கும் போது இந்த பிரச் னைகள் அனைத்தும் திட்டமிட்டு உரு வாக்கப்பட்டுள்ளது என்பது புரிகிறது.

திட்டமிட்டு இதனை செய்து மீண் டும் நாட்டில் இனரீதியான மோதலை உருவாக்கி தற்போது உள்ள அரசாங் கத்தை தொடர்ந்தும் ஆட்சியில் தக்க வைத்துக்கொள்ள மேற்கொள்ளப்படும் திட்டங்களா? என்ற சந்தேகம் எழுகிறது.

எனவே, நாம் மக்களுக்கு கூறுகி றோம். விழிப்புணர்வுடன் இருங்கள். தங்களது ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள ராஜபக்ஷ தரப்பினரும் விக்கிர மசிங்க தரப்பினரும் இணைந்து சதித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றனர்.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நாம் கண்டோம். இந்த சதித் திட்டத்தின் மற்றுமொரு விளைவு என்பது தற்போது வெளி வர ஆரம்பித்துள்ளது. இன்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை யில் வாசிக்கும் போது திருடர்கள், குண்டர்கள், அரசியலவாதிகள் இன வாதத்தின் பின்னால் மறைந்து கொள் வது அறிகிறோம்.

வரலாற்றிலும் இதற்கு முன்னரும் கண்டோம். இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் திட்டமிட்டு நாட்டில் இனப் பிரச்னை மற்றும் மோதல் அரங்கேற் றப்படவுள்ளதா? என்பது எமக்கு தெரியாது - என்றார். (ஐ)

# தோட்டத்தில் வேலை செய்துவிட்டு வீடு திரும்பியவர் வீழ்ந்து மரணம்!

யாழ்ப்பாணம், ஓக. 25

தோட்டத்தில் வேலை செய்துவிட்டு வீட்டுக்கு வந்தவர் வீதியில் விழுந்து மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் குப் பிளான் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபர் அதிகாலை 4.30 மணிக்கு குப்பிளான் தெற்கு பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் வேலை செய்து விட்டு மதியம் ஒரு மணியளவில் வீட்டுக்கு வரும்போது, வீதியில் விழுந்து உயிரிழந்தார்.

ஏழாலை தெற்கு பகுதியைச் சேர்ந்த இராசேந்திரம் நாகேஷ்வரன் (வயது 37) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

அவரின் சடலம் தெல்லிப்பழை வைத் தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மாரடைப்பு காரணமாகவே அவரது மரணம் நிகழ்ந்ததாக மருத்துவ அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# சட்டக்கல்லூரி கட்டணங்கள் அதிகரிப்பு நியாயமற்றவை

### அநுரகுமார திஸநாயக்க

கொழும்பு, ஓக. 25

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வருமானத்தை ஈட்டிக் கொள்ள இலங்கை சட்டக்கல்லூரி 150 சதவீதம் முதல் 1400 சதவீதத்தில் கட்ட ணங்களை எதனடிப்படையில் அதிகரித் துள்ளது. முறையற்ற வகையில் வெளியி டப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலை வரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க நீதியமைச் சரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக் கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

சட்டக்கல்லூரியின் கற்கை கட்டணம் குறித்து வெளியிடப்பட்டுள்ள வர்த்த மானி அறிவிததலாம் நடுத்தர மாணவர் கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.சடுதியான கட்டண அதிகரிப்பால் பலரது சட்டக் கல்லூரி கனவு நிச்சய மற்றதாகியுள்ளது.

கடந்த காலங்களில் 6000 ரூபாயாக காணப்பட்ட சட்டக்கல்லூரி அனுமதி பரீட்சைக் கட்டணம் தற்போது 15 ஆயிரம் ரூபாயாகவும் முதலாம் ஆண்டு மாணவர்களின் கற்கை மற்றும் நூலக செலவுகள் உட்பட ஏனைய செலவுகளுக் காக அறவிடப்பட்ட 18,900 ரூபாய் தற்போது 67, 500 ரூபாயாகவும், இரண்டாம் மாணவர்களிடமிருந்து அற விடப்பட்ட 15 ஆயிரம் ரூபாய் தற் போது 40 ஆயிரத்து 500 ரூபாவாகவும்: இறுதி ஆண்டு மாணவர்களிடமிருந்து அறவிடப்பட்ட 19 ஆயிரம் ரூபாய் தற்போது 50 ஆயிரத்து 500 ரூபாயாக வும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சடுதியாக கட்டணம் அதிகரிக்கப்பட் டுள்ளதால் பொருளாதார ரீதியில் பாதிக் கப்பட்டுள்ள பெரும்பாலான பெற்றோர் தமது பிள்ளைகளின் கனவை நிறை வேற்ற முடியாத நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இவ்வாறான கட்டண அதிகரிப்பால் திறமையான சட்டத்தரணிகள் உருவாவதற்கு பெரும் தடை ஏற்பட்டுள்ளது.

சட்டக்கல்லூரி மாணவர்களிடமி ருந்து அறவிடும் கட்டணங்களை சடுதி யாக அதிகரிக்கும் வகையில் 150 சதவீதத் தில் இருந்து 1400 சதவீதம் வரை அதிக ரிக்கும் வகையில் கட்டணங்கள் அதிக ரிக்கப்பட்டுள்ளமை அநீதியாகும் - என் றார். (ஐ)

# மருத்துவர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, ஓக. 25

நிறைவுகாண் மருத்துவர்களின் பணிப் புறக்கணிப்பால் நேற்று நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

நேற்று காலை ஆரம்பமான இந்த பணிப்புறக்கணிப்பில் கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள், ஆய்வக வல்லுநர்கள் மற்றும் தொழில்சார் சிகிச்சை நிபுணர்கள் ஆகிய 5 தொழிற் சங்கங்கள் இணைந்து கொண்டன.

ஆட்சேர்ப்பு செயல்பாட்டுக்கு அனு மதி வழங்குதல், தொழிற்சங்கத் தலை வர்களை தண்டிக்கும் செயல்பாட்டை உடனடியாக நிறுத்துதல் உள்ளிட்ட ஏழு கோரிக்கைகளை முன்வைத்து இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப் பட்டது. (ஐ)

## வடக்கு...

வெப்ப பாதிப்பால் நீரிழப்பு, சோர்வு ஏற்படலாம். வெப்ப பாதிப்பு அதிகரிக் கும்போது அது பக்கவாதத்துக்கும் வழி வகுக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, முல்லைத்தீவு, திருகோண மலை, மட்டக்களப்பு, அம்பாறை மற் றும் அநுராதபுரம், பொலநறுவை, மொனராகலை ஆகிய 8 மாவட்டங் களுக்கே இந்த வெப்ப எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முடிந்தவரை தண்ணீரை அருந்துவது டன், நிழலான இடங்களில் ஓய்வெடுப் பது அவசியம். வீட்டுக்குள் இருக்கும் முதியவர்கள், நோயாளிகள் பரிசோதிக் கப்பட வேண்டும். சிறுவர்களின் உடல் நலனிலும் அக்கறை காட்டவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கை...

தலைவர்கள் சந்தித்து கலந்துரையாடி னர்.

இந்த சந்திப்பில் இலங்கை தமிழரசு கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் பங்கேற்றிருந்தார். அவரிடம் இந்த சந்திப்பு குறித்துக் கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சந்திப்பில் இரண்டு விட யங்கள் பேசப்பட்டன. 13ஆவது திருத் தச் சட்டம் தொடர்பில் பாராளுமன் றத்துக்கு இந்த விடயங்களை பாரப் படுத்த வேண்டிய தேவையில்லை. அரச மைப்பில் இருக்கின்ற விடயங்களை ஜனாதிபதி அமுல்படுத்த முடியும்.

ஆனால், அவரோ 13ஆம் திருத் தத்தை நான் நடைமுறை படுத்துவேன் என்று சொல்கிறார். அப்படி இல்லை என்று எதிர்ப்பவர்கள் மாகாண சபை முறைமையை இல்லாது செய்ய சொல் கின்றார்கள். இதை பார்க்கும்போது அவரே மறைமுகமாக இதனை சொல்லி இருக்கின்றார் எனத் தெரிகிறது.

வரி விதிப்பை பொறுத்தவரை கோட்டாபயவுக்கு தவறான ஆலோ சனை வழங்கப்பட்டுதான் பொருளாதார பிரச்னை ஏற்பட்டது. தற்போது இந்த அரசாங்கமும் கல்விமான்கள், மருத்து வர்கள் போன்றோருக்கு புதிதாக வரி விதிப்பதன் மூலம் அவர்கள் வெளிநாடு போகின்ற போது மக்களையே பாதிக்கப் போகிறது.

ஆனபடியால் அமெரிக்கா போன்ற நாடுகள் இந்த விடயங்களை இனி ஐக் கிய நாடுகள் சபை மட்டத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# குமுதினி நேற்று முதல் மீண்டும் சேவையில்!

யாழ்ப்பாணம், ஓக. 25

நெடுந்தீவின் பிரதான போக்குவரத்து மார்க்கமான குமுதினிப் படகு நேற்று வியாழக்கிழமை முதல் மீண்டும் பயணிகள் சேவையில் ஈடுபட ஆரம்பித்துள்ளது.

குமுதினிப் படகு பழுதடைந்த நிலையில் திருத்த வேலைகளின் பின்னர் குறிகாட்டுவானில் தரித்துவிடப் பட்டிருந்தது. நேற்று முன் தினம் மாலை குமுதினிப் படகு குறிகாட்டுவானில் இருந்து பயணிகளை ஏற்றிய வாறு நெடுந்தீவு சென்று தரித்ததுடன் நேற்று காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கிப் புறப்பட்டு அங்கிருந்து மீண்டும் நெடுந்தீவுக்கு பயணித்தது.

யாழ்.குறிகட்டுவான் மற்றும் நெடுந்தீவு பயணிகளுக்கான கடல்வழிப் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட குமுதினி படகு அடிக்கடி செயலிழந்த நிலையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

குமுதினி படகு 1968 ஆம் ஆண்டு முதல் யாழ்.நெடுந்தீவிற்கான போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்க முடியாத இக்கட்டுநிலை!

## சபையில் கல்வி அமைச்சர் கவலை

கொழும்பு, ஓக. 25

ஆறுமாத இடைக்கால உத்தரவின் காரணமாக பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்க முடியவில்லை என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்த நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்ததுடன் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவது மனுதாரர்களுக்கு புரியவில்லையா என கேள்வி எழுப்பினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட சபை உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்-

இடைக்கால உத்தரவுகளுக்கு கால அவகாசம் இருக்க வேண்டும். அதற்கு சிவில் நடைமுறை சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும். சட்டத்துறை அமைச்சரிடம் திருத்தம் கொண்டு வர வேண்டும். ஆறு மாதங்களுக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதிபர்களை நியமிக்க முடியாது. நாங்கள் கடந்து செல்கிறோம். இதுபோன்ற விஷயங்களால் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. இவற்றை பதிவிடும் மனுதாரர்களுக்கு இது புரியவில்லையா. இது நில வழக்கு அல்ல.

இடைக்காலத் தடை அப்படி ஒன்றும் இல்லை. இடைக்கால தடை உத்தரவு நிரந்தர உத்தரவாக இருக்க முடியாது. எதிர்வரும் இரண்டு வாரங்களில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களை பணியமர்த்த மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

32,000 ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. தொடக்கப் பிரிவில் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டதால், அந்தத் துறை சீரழிந்துள்ளது-என்றார். (அ)

# சரத் வீரசேகரவின் உரைக்கு எதிர்ப்பு; முல்லை சட்டத்தரணிகள் போராட்டம்

முல்லைத்தீவு, ஓக. 25

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தொடர்பாக அவதூறு பரப்பும் வகையிலும், நீதித்துறைச் சுதந்திரத்தை கேள்விக்குட்படுத்தும் வகையிலும் சரத் வீரசேகர பாராளுமன்றில் ஆற்றிய உரையை கண்டித்தும் எதிர்ப்புத் தெரிவித்தும் இன்று முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தினரால் கண்டனப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 09.30 மணி முதல் 10.30 மணிவரை நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து அடையாள கண்டனப் போராட்டம் ஒன்றை நடத்த முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்க கூட்டத்தில் நேற்று ஏகமனதாக தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது.

அதேவேளை, இந்த அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் ஏனைய கிளைச்சங்கங்களும் தத்தமது நீதிமன்றங்களில் குறித்த அடையாள கண்டனப் போராட்டத்தை மேற்கொள்ளுமாறும் முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

## திருமலை விகாரை விவகாரத்தில்

# கிழக்கு மாகாண ஆளுநரின் தீர்மானத்தை ஏற்கவில்லை!

## பாராளுமன்றத்தில் அமைச்சர் விதுர



கொழும்பு, ஓக. 25

**திருகோணமலை பொரலுகந்த ரஜமஹா விகாரையின் மகா நாயக்கர் அம்பிட்டிய சுகித வன்சதிஸ்ஸ தேரரை விகாரைக்குள் பிரவேசிக்கவிடாமல் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் நடவடிக்கை நியாயமற்றது என புத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

அத்துரலிய ரத்ன தேரர் சபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், தேரரை விகாரைக்குள் பிரவேசிப்பதைத் தடுக்கும் கிழக்கு மாகாண ஆளுநரின் தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது என தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இவ்விவகாரம் தொடர்பாக இரண்டு நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதால், அது தொடர்பான விவரங்களை வெளியிடும் நிலையில் தாம் இல்லை என்று அமைச்சர் கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பாக இரண்டு நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ளதால், பொறுப்புள்ள பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் விவரங்களைக் கூறுவதைத் தவிர்க்கிறேன்,"- என்றார்.

மேலும், அண்மைக் காலத்தில் பெருமளவிலான தொல்பொருள் இடங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

"சில தளங்கள் புதையல் வேட்டைக்காரர்களால் அழிக்கப்பட்டுள்ளன, மற்றவை ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களால் அழிக்கப்பட்டுள்ளன," என்று அவர் கூறினார்.

நாகச்சோலை காப்புக்காடு உட்பட வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சில விகாரைகள் தொடர்பாக பல பிரச்னைகள் எழுந்துள்ளதாகவும், அங்கு ஆராம வளாகம் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளதாகவும், குருந்தூர் விகாரை தொடர்பாகவும் ரத்ன தேரர் தெரிவித்தார்.

போரினால் இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு காணி பகிர்ந்தளிப்பதை எவரும் எதிர்க்கவில்லை. ஆனால் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தொல்பொருள் இடங்களைப் பாதுகாப்பதும் முக்கியமானது என்றும் அவர் கூறினார்.

எவ்வாறாயினும், பிரச்னைகளை சுமுகமாக தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார். (அ)

# யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்கவுக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் எரிந்தது!



கொழும்பு, ஓக. 25

யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற சொகுசு பஸ் நீர்கொழும்பில் தீப்பற்றி எரிந்தது.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 4:30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வெளிநாடு செல்வதற்காக 35 பயணிகளை ஏற்றிச் சென்ற சொகுசு பஸ் ஒன்றே இவ்வாறு தீப்பற்றி எரிந்துள்ளது.

சம்பவம் குறித்து பஸ்ஸின் சாரதி கூறுகையில்-

புதன்கிழமை இரவு எட்டு மணி அளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து 35 பயணிகளை ஏற்றிக்கொண்டு விமான நிலையம் நோக்கிப் புறப்பட்டோம்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை 4.30 மணி அளவில் நீர்கொழும்பு தளுவகொட்டுவ பிரதேசத்தில் வைத்து திடீரென தீ பற்றி கொண்டது. உடனடியாக பஸ்ஸில் இருந்த பயணிகள் காப்பாற்றப்பட்டனர். வேறு வாகனங்களில் அவர்கள் விமான நிலையம் சென்றனர். நீர்கொழும்பு தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு வந்து தீயை கட்டுப்பாடுத்தினர் - என்றார்.

இந்த தீ விபத்து காரணமாக பஸ் முற்றாக எரிந்துள்ளது. பயணிகள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. கொச்சிக்கடை பொலிஸார் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு புதுக்குடியிருப்பில் கவனயீர்ப்புப் பேரணி!





முல்லைத்தீவு, ஓக. 25

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சிறுவர் பாதுகாப்பினை உறுதிப்படுத்த கோரி கவனயீர்ப்பு பேரணியும், மனு கையளிப்பு நடவடிக்கையும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று காலை புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இயங்கிவரும் காருண்யம் சிறுவர் அபிவிருத்தி நிலையம் மற்றும் சிறுவர்களின் போசாக்கு அபிவித்தி நிலையம் ஏற்பாட்டில் இந்த கவனயீர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை முன்பாக இருந்து ஆரம்பமான கவனயீர்ப்புப் பேரணியும், புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு பகுதியில் இருந்து ஆரம்பமான கவனயீர்ப்புப் பேரணியும் புதுக்குடியிருப்பு சந்தியினை சென்றடைந்து அங்கிருந்து கவனயீர்ப்பை வெளிப்படுத்தியவாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் சென்றடைந்தது.

அங்கு சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யுமாறு கோரிக்கைகள் அடங்கிய மனு வாசிக்கப்பட்டு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதில் சுமார் 500 வரையான சிறுவர்கள், பெரியவர்கள் வரை கலந்து கொண்டுள்ளார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அதிகரிக்கும் சிறுவர் துஷ்பிரயோகத்தினை கட்டுப்படுத்தக் கோரி புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்திடம் மனு கையளிக்கப்பட்டது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### உலகக் கிண்ண சதுரங்கம்

# பிரக்ஞானந்தாவை வென்று சம்பியனானார் கார்ல்சன்!

பாகு, ஓக. 25

உலகக் கிண்ண சதுரங்கத்தில் இந்தியாவின் பிரக்ஞானந்தாவை வெற்றி கொண்டு ஆறாவது தடவையாக சம்பியன் வென்றார் நோர்வேயின் கார்ல்சன்.

உலகக் கிண்ண சதுரங்க தொடர் அசர்பைஜானின் பாகு நகரில் நடந்தது.

இதன் இறுதிப் போட்டியில் இந்தியாவின் பிரக்ஞானந்தாவும் நோர்வேயின் கார்ல்சனும் மோதினர். இரு நாள்கள் நடந்த இறுதிப் போட்டியின் இரு சுற்றுகளும் சமநிலையில் முடிவடைந்தன.

இந்நிலையில், நேற்று சமநிலை தவிர்ப்பு சுற்று நடந்தது. இதில் பிரக்ஞானந்தா வெள்ளை நிற காயுடன் ஆடினார். இதில் கார்ல்சன் வெற்றி பெற்றார்.




இரண்டாவது சுற்றில் பிரக்ஞானந்தா கறுப்பு காய்களுடன் விளையாடினார். இந்த சுற்று சமநிலையில் முடிந்தது. முதல் சுற்றில் மேக்னஸ் கார்ல்சன் வெற்றி பெற்றிருந்ததால் அவர் சம்பியனாக அறிவிக்கப்பட்டார்.

இது அவரின் ஆறாவது உலகக் கிண்ண வெற்றியாகும். (ஐ)

### அயர்லாந்துடனான தொடர்

# மூன்றாவது போட்டி இரத்து கிண்ணம் இந்தியா வசம்!




டப்ளின், ஓக. 25

இந்தியா - அயர்லாந்து அணிகள் இடையிலான கடைசி மற்றும் 3ஆவது இருபது - 20 கிரிக்கெட் போட்டி மழையால் முழுமையாக தடைப்பட்டது. இதனால், இந்த தொடரை 2-0 என்ற கணக்கில் இந்தியா வென்றுள்ளது.

ஜஸ்பிரீத் பும்ரா தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபது -20 கிரிக்கெட் தொடரில் மழையால் பாதிக்கப்பட்ட முதல் போட்டியில் இந்திய அணி டக்வேர்த் லூயிஸ் விதிப்படி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தொடர்ந்து 2ஆவது போட்டியில் இந்திய அணி 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 2-0 என தன்வசப்படுத்தியது.

இந்நிலையில், கடைசி மற்றும் 3ஆவது ஆட்டம் டப்ளின் நகரில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் மழை காரணமாக இந்தப் போட்டி ஒரு பந்து கூட வீசப்படாமல் இரத்து செய்யப்பட்டது.

தொடர் நாயகன் விருதை அணித்தலைவர் பும்ரா பெற்றார். வெற்றி கோப்பையை பெற்ற அவர், அதனை இளம் வீரர்கள் யஷஸ்வி ஜெய்ஸ்வால் மற்றும் ரிங்கு சிங் வசம் வழங்கினார். (ஐ)




### உலகக் கிண்ணம்

# இலங்கை அணிக்கு இரு பயிற்சி போட்டி

புதுடில்லி, ஓக. 25

இந்தியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கு முன்னர் இலங்கை இரு பயிற்சி போட்டிகளில் விளையாட உள்ளது.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் 10 நாடுகளுக்கும் தலா 2 பயிற்சிப் போட்டிகளில் விளையாடுவதற்கு ஐ. சி. சியால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

பயிற்சி போட்டிகள் செப்ரெம்பர் 29ஆம் திகதியிலிருந்து ஒக்ரோபர் 3ஆம் திகதிவரை குவாஹாட்டி, ஹைதராபாத், திருவனந்தபுரம் ஆகிய 3 இடங்களில் நடைபெறவுள்ளன.

இலங்கை தனது முதலாவது பயிற்சி போட்டியில் பங்களாதேஷை குவாஹாட்டி விளையாட்டரங்கில் செப்ரெம்பர் 29ஆம் திகதி எதிர்த்தாடவுள்ளது.

இதே மைதானத்தில் ஆப்கானிஸ்தானை ஒக்ரோபர் 3ஆம் திகதி இலங்கை சந்திக்கும். பயிற்சி போட்டிகள் யாவும் அணிக்கு 50 ஓவர்களை கொண்டதாக இருக்கும். ஆனால், குழாம்களில் உள்ள 15 வீரர்களுக்கும் விளையாட சந்தர்ப்பம் இருப்பதால் அப் போட்டிகளுக்கு சர்வதேச ஒருநாள் அந்தஸ்து வழங்கப்படமாட்டாது.

# ஐ. சி. சி. துடுப்பாட்ட தரவரிசை ஷுப்மன் கில் முன்னேற்றம்!

டுபாய், ஓக. 25

ஐ.சி.சி. ஒருநாள் போட்டி துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் ஷுப்மன் கில் 4ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

ஒருநாள் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் ஷுப்மன் கில், 743 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தில் இருந்து 4ஆவது இடத்துக்கு முன்னேறினார். விராட் கோலி (705 புள்ளி), அணித் தலைவர் ரோஹித் சர்மா (693) முறையே 9, 11ஆவது இடத்தை தக்க வைத்துக் கொண்டனர். பாகிஸ்தானின் பாபர் அஸாம் (880) முதலிடத்தில் நீடிக்கி றார்.



பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்திய வேகப் பந்துவீச்சாளர் முகமது சிராஜ் (670), 4ஆவது இடத்தில் இருந்து 5ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். இந்திய 'சுழல்' வீரர் குல்தீப் யாதவ் (622), 10ஆவது இடத்தில் தொடர்கிறார்.

சர்வதேச இருபது - 20 தரவரிசையில் இந்தியாவின் சூர்யகுமார் யாதவ் (889) முதலிடத்தில் நீடிக்கிறார். பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் ரவி பிஷ்னோய் (456), பும்ரா (415) முறையே 65, 84ஆவது இடத்துக்கு முன்னேறினர். (ஐ)

# அமெரிக்க ஓப்பன் கிண்ணம்; இன்ரர் மியாமி இறுதிக்கு தகுதி

மியாமி, ஓக. 25

அமெரிக்க ஓப்பன் கிண்ண உதைபந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டிக்கு மெஸ்ஸி தலைமையிலான இன்ரர் மியாமி அணி முன்னேறியுள்ளது.

அமெரிக்க ஓப்பன் கிண்ண உதைபந்தாட்டதொடர் அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற அரையிறுதி போட்டியில் உதைபந்தாட்ட உலகின் சிறந்த வீரர் மெஸ்ஸி தலைமையிலான இன்ரர் மியாமி மற்றும் சின்சினாட்டி அணிகள் மோதின.

இந்த போட்டியில் இரு அணிகளும் சிறப்பாக ஆடி கோல் அடித்தன. இதனால் இறுதியில் இரு அணிகளும் 3-3 என சமநிலையில் இருந்தன. போட்டி சமநிலையில் முடிந்ததால் வெற்றியாளரை தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு முறை கடைபிடிக்கப்பட்டது.

இதில் இன்ரர் மியாமி அணி 5-4 என்ற கணக்கில் சின்சினாட்டி அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

அமெரிக்க ஓப்பன் கிண்ண இறுதிப்போட்டி செப்ரெம்பர் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் இன் ரர் மியாமி -ஹூஸ்டன் டைனமோ அணிகள் மோதுகின்றன.



# பிரக்ஞான் ரோவர்: வெறும் 26 கிலோ எடையுள்ள இஸ்ரோவின் குழந்தை நிலவில் என்ன சாதிக்கும்?

க. சுபகுணம்

இந்தியா ஏவிய சந்திரயான்-3 விண்கலம் நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாகத் தரையிறங்கிவிட்டது. தரையிறங்கிய விக்ரம் லேண்டரில் இருந்து ரோவர் எனப்படும் ஊர்திக்கலன் வெளியேறி பணிகளைத் தொடங்கி உள்ளது. நிலவில் என்ன செய்யப் போகிறது?

அதுகுறித்த தகவல்களை இஸ்ரோ அதன் இணையதளத்தில் தெரிவித்துள்ளது. சந்திரனின் ஒரு நாள் என்பது பூமியில் 28 நாட்களுக்குச் சமம். அதாவது அங்கு 14 நாட்களுக்குப் பகல் மற்றும் 14 நாட்களுக்கு இரவு நிலவும்.

இதில் 14 நாட்களுக்கு பகல் நீடிக்கும் காலகட்டத்தில் விக்ரம் லேண்டர் தரையிறங்கியுள்ளது. இந்த இரண்டு வார காலகட்டத்தில் இஸ்ரோவின் ஆய்வுகளை அது நிலவில் மேற்கொள்ளும்.

அங்கு விக்ரம் லேண்டரில் இருந்து வெளியே வரும் பிரக்ஞான் ரோவர் மேற்கொள்ளப் போகும் ஆய்வுகள் இந்தியாவின் எதிர்கால நிலவு மற்றும் விண்வெளித் திட்டங்களில் குறிப்பிடத்தக்கப் பங்கு வகிக்கும்.

### விக்ரம் லேண்டர் சேகரிக்கும் தகவல்களை என்ன செய்யும்?

விக்ரம் லேண்டர் தரையிறங்கியதால் எழும்பிய புழுதி அடங்கிய பிறகு நிதானமாக வெளியே வந்த பிரக்ஞான் ரோவர், நிலா குறித்து அனுப்பும் தகவல்களை விஞ்ஞானிகள் ஆய்வு செய்வார்கள்.

அந்தத் தரவுகள் லேண்டர் மூலம் பூமிக்கு அனுப்பப்படும். மின்காந்த அலைகுகளாக மாற்றப்படும் அந்தத் தரவுகளை ஒருவேளை லேண்டர் மூலம் பூமிக்கு அனுப்பும் முயற்சி தோல்வியடைந்துவிட்டால் என்ன செய்வது?

அதற்கும் இஸ்ரோ ஒரு மாற்றுத் திட்டத்தை வைத்துள்ளது. இந்த இடத்தில்தான் சந்திரயான்-2இன் ஆர்பிட்டர் உள்ளே வருகிறது.

அந்த ஆர்பிட்டர் தரையிறங்கி கலனுடன் தொடர்பில் இருக்கும். விக்ரம் தரையிறங்கி கலன் ரோவரிடம் இருந்து பெறும் தகவல்களையும் அது மேற்கொள்ளும் ஆய்வுகளின் தரவுகளையும் மொத்தமாக பூமிக்கு அனுப்பும்.

அதேவேளையில், அந்தத் தரவுகளை ஆர்பிட்டருக்கும் அனுப்பி வைக்கும். பிறகு, அந்தத் தரவுகள் ஆர்பிட்டர் மூலம் பூமிக்கு மீண்டும் அனுப்பப்படும்.

இரண்டில் ஏதாவது ஒரு திட்டத்தில் பிரச்னை ஏற்பட்டாலும் தரவுகள் தங்கள் கைக்குக் கிடைத்துவிட வேண்டும் என்பதற்காக இத்தகைய யுக்தியை இஸ்ரோ பயன்படுத்துகிறது.

### ரோவர்: 26 கிலோ மட்டுமே எடைகொண்ட இந்தக் கலன் என்ன செய்யும்?

ஊர்திக்கலமான ரோவர், அதன் தாய்க்கலமான லேண்டரில் இருந்து வெளியே வந்துவிட்டதை உறுதி செய்யும் வகையில் தாயும் சேயும் ஒன்றையொன்று படமெடுத்து அனுப்பிவிட்டன.

நிலாவின் தரையில் இறங்கிவிட்ட இந்த 26 கிலோ எடை கொண்ட இஸ்ரோவின் குழந்தை என்னவெல்லாம் செய்யும்?

நிலாவின் தரைப்பரப்பில் விநாடிக்கு ஒரு செ.மீ என்ற வேகத்தில் ரோவர் நகரும். அப்படி நகரும் நேரத்தில் அது அங்குள்ள பொருட்களை ஸ்கேன் செய்துகொண்டே நகரும்.

மேலும், நிலாவின் காலநிலை குறித்த தரவுகளைப் பகுப்பாய்வு செய்து தரவுகளை அனுப்பும். அதுமட்டுமின்றி, நிலாவின் மேற்பரப்பின் தன்மை குறித்த ஆய்வுகளையும் மேற்கொள்ளும்.


எளிமையாகச் சொல்ல வேண்டுமெனில், சேய் கலமான ரோவர் நிலாவின் மண் மாதிரிகளை ஆய்வு செய்து தரைப்பரப்பின் தன்மை என்ன, வெப்பம் எந்த அளவுக்கு உள்ளது, தண்ணீர் உள்ளதா என்பன போன்ற தகவல்களைச் சேகரித்து அனுப்பும்.

இயல்பாகவே ஒரு பொருளை உடைத்தால்தான் அதற்குள் என்ன இருக்கிறது என்பதை நம்மால் தெரிந்துகொள்ள முடியும். அதேபோல் ரோவர் மண்ணைக் குடைந்து அதிலிருந்து மாதிரிகளை எடுத்து, அதை லேசர் மூலம் உடைத்துப் பார்க்கிறது.

நிலாவின் மண்ணில் என்னென்ன தனிமங்கள் உள்ளன என்பதை அதனால் கண்டறிய முடியும்.

ஊர்திக்கலன் நிலாவின் தரையைக் குடைந்து மாதிரிகளைச் சேகரித்து ஆய்வு செய்யும். அதன்மூலம் அந்த மாதிரிகளில் மெக்னீசியம், அலுமினியம், இரும்பு, சிலிகான், டைட்டானியம் என என்னென்ன தனிமங்கள் உள்ளன என்பதைக் கண்டுபிடிக்கும்.

அதோடு நிலாவின் மேற்பரப்பில் உள்ள வேதிம கலவைகளையும் தெரிந்துகொள்ள வேண்டும். ஹைட்ரஜன், ஆக்சிஜன் போன்றவற்றின் இருப்பு, கனிமங்கள் என்னென்ன உள்ளன என்று நிலாவின் மண்ணை எடுத்து ஆய்வு செய்து



சந்திரயான்-3 விண்கலத்தின் மொத்த எடையில் வெறும் 26 கிலோ மட்டுமே எடையுள்ள இந்தச் சிறிய ரோவர் தான் முக்கியமான ஆய்வுகளை நிலாவில் செய்யப் போகிறது.



விக்ரம் லேண்டரில் உள்ள சாய்வுக்கதவு திறக்கும் போது, ரோவர் வெளியே வந்து நிலவின் தரையைத் தொடும்.



நிலாவின் தரைப்பரப்பில் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை மேற்கொள்ளப் போவது இந்த பிரக்ஞான் ரோவர் தான்.

கண்டுபிடிக்க வேண்டும்.

இதற்கு அலைமாலை அளவி என்ற கருவியை ரோவர் பயன்படுத்துகிறது. இந்த அலைமாலை கருவியால் ஒரு பொருளில் இருக்கக்கூடிய பல்வேறு தனிமங்களைப் பிரித்துப் பார்த்து வகைப்படுத்த முடியும்.

அதன்மூலம், நிலாவின் மணற்பரப்பில் என்னென்ன வகையான தாதுக்கள், கனிமங்கள் இருக்கின்றன என்பதை இஸ்ரோவால் தெரிந்துகொள்ள முடியும். அவற்றைத் தெரிந்துகொள்வது எதிர்காலத்தில் நிலவை மனிதர்கள் மற்ற கோள்களுக்கு விண்வெளிப் பயணம் மேற்கொள்ளும்போது ஒரு தளமாகப் பயன்படுத்தக்கூட உதவும். இதற்குச் சான்றாக செவ்வாய் கோளுக்கான பயணத் திட்டத்தைக் கூறலாம்.

### சந்திரயான்-3இன் ஆய்வுகள் மனிதன் விண்வெளிக்குச் செல்ல உதவுமா?

செவ்வாய் கிரகத்திற்குப் பயணிக்கும் ஒரு திட்டம் இருக்கிறது என வைத்துக்கொள்வோம். பூமியில் இருந்தே அந்தப் பயணத்திற்குத் தேவையான எரிபொருள்களையும் நாம் எடுத்துச் செல்வது கிட்டத்தட்ட சாத்தியமற்றது.

ஒருவேளை இந்த ஆய்வுகளின் மூலம் எதிர்காலத்தில் நிலாவில் ஒரு தளம் அமைக்க முடிந்தால், நிலவுக்குச் செல்வதற்குத் தேவையான எரிபொருளை மட்டும் நிரப்பிக்கொண்டு பூமியில் இருந்து கிளம்பினால் போதுமானது.

நிலவை அடைந்த பிறகு, அங்குள்ள தளத்தில் அங்கேயே சேகரிக்கப்படும் ஹைட்ரஜன் மூலம் உற்பத்தி செய்யப்படும் ஹைட்ரஜன் எரிவாயுவை பயன்படுத்தி செவ்வாய் கோளுக்கான பயணத்தை மனிதர்கள் மேற்கொள்ள முடியும். இத்தகைய முயற்சிகள் உடனடியாக சாத்தியப்படாது என்றாலும், அவற்றுக்கான தொடக்கமாக இஸ்ரோவின் இந்த ஆய்வு இருக்கக்கூடும் என்பதே விஞ்ஞானிகளின் கூற்று.

சந்திரயான்-3 விண்கலனின் மொத்த எடையில் வெறும் 26 கிலோ மட்டுமே எடைகொண்ட ஊர்திக்கலனில் இருக்கும் எல்.ஐ.பி.எஸ்., ஏ.பி.எக்ஸ்.எஸ் என்ற இரண்டு கருவிகள்தான் இந்த ஆய்வுகள் அனைத்தையும் மேற்கொள்ளப் போகின்றன.

இந்த ஆய்வுகள் எதிர்காலத்தில் இந்தியா மட்டுமின்றி உலக நாடுகளே விண்வெளிப் பயணங்களை மேற்கொள்வதற்குக்கூட உதவலாம் என்று கூறுகிறார் சதீஸ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தின் முன்னாள் இயக்குநர் முனைவர் எஸ்.பாண்டியன்.

நிலாவின் தரைப்பரப்பில் இத்தகைய குறிப்பிடத்தக்க ஆய்வுகளை மேற்கொள்ளப் போவது இந்த பிரக்ஞான் ரோவர்தான்.

இதற்கிடையே, பிரக்ஞான் ரோவரில் உள்ள சக்கரங்களும் ஒரு முக்கிய வேலையைச் செய்யும்.

இப்படியாக பிரக்ஞான் ரோவர் முன்னோக்கி நகர்ந்துகொண்டே ஆய்வுகளைச் செய்யும்போது, அதன் ஆறு சக்கரங்களும் நிலாவின் தரைப்பரப்பில் இந்தியாவின் மூவர்ணக் கொடி மற்றும் இஸ்ரோவின் லோகோவை நிலவின் மேற்பரப்பில் பதிய வைக்கும்.

### இரண்டு வாரங்களுக்கு மட்டுமே ஆய்வு செய்யும் சந்திரயான்-3

இந்தத் திட்டத்தின் கீழ் நிலாவில் இந்தியா மேற்கொள்ளப்போகும் ஆய்வுகள் அனைத்துமே இரண்டு வாரங்களுக்கு மட்டும்தான்.

ஏனென்றால், இரண்டு வாரம் முடிந்ததும் நிலாவில் இரவு தொடங்கிவிடும். இரவு நேரத்தில் அங்கு மைனஸ் 200 டிகிரி செல்ஷியஸ் வரைக்குமே வெப்பநிலை குறையும். அந்த உறைபனிக் குளிரில் லேண்டர், ரோவர் இரண்டுமே இயங்க முடியாது.

அவை இயங்குவதற்குத் தேவையான சூரிய ஒளி அடுத்த இரண்டு வாரங்களுக்குக் கிடைக்காது. அது மட்டுமின்றி, இரவு நீடிக்கும் அந்த இரண்டு வாரங்களிலும் நிலவும் உறைபனிக் குளிர் அவற்றின் பாகங்களில் விரிசல்கள் விழச் செய்யலாம். இதனால் அவை விரைவிலேயே இறந்துவிடும்.

உறைபனிக் குளிரில் இந்தக் கருவிகளால் இயங்க முடியாது என்பதையும் தாண்டி, அவற்றின் கட்டமைப்பிலேயே சேதங்கள் ஏற்படக்கூடும். உலோகங்களால் உறைபனிக் குளிர் வெப்பநிலையைத் தாங்க முடியாது.

அதிலும் 200 டிகிரி செல்ஷியஸ் வரைக்கும் செல்லும் போது, அத்தகைய வெப்பநிலையில் அவை சேதமடை யக்கூடும். இதனால், லேண்டர், ரோவரின் பாகங்கள் செயலிழக்க வாய்ப்புள்ளது.

ஆக, அடுத்த இரண்டு வாரங்களில் ரோவரும் லேண்டரும் அனுப்பவுள்ள தரவுகள்தான் உலகளவில் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தை ஒரு புதிய பரிமாணத்திற்குக் கொண்டு செல்லப் போகின்றன.

●

- சடகோபன் ராமையா

# மலையகத் தமிழ் மக்கள் இந்திய வம்சாவழித் தமிழர் என்ற அடையாளத்தை மறுப்பதற்கான காரணிகள்!



மலையக தமிழ் மக்கள் தம்மை இந்தியர்கள் என்று அழைத்துக் கொண்டதால்......

**(அ)** *1948ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பிரஜா உரிமை பறிப்பு சட்டம் ஒன்றை கொண்டுவந்து பிரஜா உரிமையையும் வாக்கு உரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர் ஆக்கி அவர்கள் அனைவரும் இந்தியாவுக்கே போய்விடவேண்டும் என்று கோஷமிட்டார்கள். இந்திய வம்சாவழி மக்கள் இடதுசாரிகளுடன் சேர்ந்து இந்த நாட்டின் அரசாட்சியை கைப்பற்றி விட கூடும் என்று அச்சம் அப்போது எழுந்தது.*

**(ஆ)** *1964ஆம் ஆண்டு சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தி இந்த மக்களின் பத்து பேரில் 7 பேர் இந்தியாவுக்கு போய்விடவேண்டும் என்று ஒப்பந்தம் செய்து ஏழு இலட்சம் பேரை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தார்கள்.*

**(இ)** *1945ஆம் ஆண்டு இரண்டாம் உலக மகா யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த தருணத்தில் கொழும்பு துறைமுகத்தின் மீது குண்டு வீசப்பட்ட போது கொழும்பு புறக்கோட்டை தமிழ் வர்த்தகர்கள் அனைவரும் தமது கடைகளை மூடிவிட்டு பாதுகாப்புக்காக இந்தியா சென்றுவிட்டனர். இதனால் நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. "இவர்கள் இவ்விதம் நெருக்கடியான நேரத்தில் நாட்டை விட்டு ஓடியவர்கள், நாட்டுப்பற்று அற்றவர்கள் என்றும், அவர்களை இந்தியாவுக்கு அனுப்பி விடவேண்டும் என்றும்" அன்றைய காலகட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் நிதி அமைச்சராக இருந்தவருமான ஜே. ஆர். ஜெயவர்த்தன பாராளுமன்றில் உரையாற்றியமை பாராளுமன்ற பதிவு புத்தகத்தில் பதிவாகியுள்ளது.*

**(ஈ)** *1945ஆம் ஆண்டு அரசாங்க சபையில் கல்வி அமைச்சராக பதவி வகித்த சி. டபிள்யூ . டபிள்யூ . கன்னங்கரா இந்த நாட்டுக்கு இலவசக் கல்வியை அறிமுகப்படுத்திய போது தோட்டப் பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள் இந்தியர்கள் என்பதால் அவர்களுக்கு இலவச கல்வி கிடையாது என்று மறுத்தார்.*

**(உ)** *1971 ஏப்ரல் கிளர்ச்சிக்காக இளைஞர்களை தயார் செய்தபோது அப்போதைய ஜே.வி.பி. தலைவர் ரோகன விஜேவீர அயல் நாடான இந்தியா "இந்திய விஸ்தரிப்பு வாதம்" என்ற கொள்கையின் அடிப்படையில் இலங்கையை ஆக்கிரமிக்க தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது என்றும் அது இந்த நாட்டில் வசிக்கின்ற 11 லட்சம் இந்தியர்களின் நலனில் அக்கறை காட்டுவதாக பாவனை செய்து கொண்டு இந்த நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுகிறது என்றும் ஆதலால் இந்த நாட்டை இந்தியாவின் ஆக்கிரமிப்பில் இருந்து தடுக்க வேண்டுமானால் இந்தியத் தமிழர்களை இந்தியாவுக்கு விரட்டி அடிக்க வேண்டும் என்றும் தனது விரிவுரையில் கூறியிருக்கிறார் என்பதற்கான பதிவுகள் காணப்படுகின்றன. அத்தகைய கொள்கையினால் ஒருகாலத்தில் ஜே. வி. பி. இந்திய மக்கள் மீது வெறுப்பை கக்கியது. அந்த வெறுப்பு இப்போதும் கூட சிங்கள மக்கள் மனதில் ஆழப் பதிந்து தான் காணப்படுகிறது.*

**(ஊ)** *இம்மக்கள் இந்தியர்கள் என்பதால் நேற்றுவரை இம்மக்களுக்கு இந்த நாட்டில் காணி வீட்டுரிமை மறுக்கப்பட்டு அடிமைகள் போல் லயக் காம்ராக்களில் அனாதைகளாக வசிக்க மட்டுமே இடமளிக்கப் பட்டிருந்தனர்.*

**(எ)** *1990 ஆம் ஆண்டு வரை இந்த மக்களின் பிள்ளைகள் க.பொ.த (சா-த ) பரீட்சையில் தேர்ச்சி அடைந்து உயர் கல்வி கற்று விடக்கூடாது என்ற எண்ணத்தினால் இவர்கள் கல்வி கற்ற பாடசாலைகளுக்கு கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் கவனமாகப் பார்த்துக்கொண்டார்கள்.*

**(ஏ)** *இப்போதும்கூட இந்த நாட்டின் ஏனைய தொழிலாளர்கள் நாட் சம்பளமாக ரூபா 2500 பெறும்போது பெரும்பான்மை மக்கள் எல்லாருமாக சேர்ந்து குறைந்தபட்சம் ரூபா ஆயிரத்தை இவர்களுக்கு கூலியாகக் கொடு என்று ஏகோபித்த குரலில் குரல் கொடுக்கிறார் களா என்றால், இல்லை.*

**(ஐ)** *இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற பெயரில் இயங்கி வந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இனிமேலும் அந்த பெயரை பயன்படுத்துவது உகந்ததல்ல என்று நினைத்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்று மாற்றிக் கொண்டதற்கு காரணம் என்ன.*

*இப்படி இன்னும் பல காரணிகளையும் கூறலாம். தற்போது இடம் பெற்று வரும் இந்திய இலங்கைக்கு இடையிலான வர்த்தக பொருளாதார நிகழ்வுகளை அவதானிக்கும் போது மீண்டும் ஒரு முறை இந்திய விஸ்தரிப்பு வாத கோட்பாடு புதுப்பிக்கப்பட்டு இந்திய மக்களுக்கு எதிராக கலவரங்கள் தோன்றலாம்.*

*ஆதலினால் நாம் நமது எதிர்கால சந்ததியினரை மனதில் கொண்டு நம் அரசியல் நிலைப்பாடுகளை பொருத்தமானதாக மாற்றிக்கொள்ள வேண்டும்.*

**மலையக மக்கள் உரிமை கோரிக்கை**

*"மலைகம் 200" நிகழ்ச்சி திட்டத்தினை ஒட்டி பேராதனை பல்கலைக்கழக கலைத் துறை, மலையக மக்களின் வரலாறு, கலை பாரம்பரியங்கள், இலக்கியம், உரிமை சார் பிரச்சனைகள், அவர்களுக்கான அரசியல் தீர்வு, காணியுரிமை என்பவற்றை மையமாகக் கொண்டு முழுநாள் ஆய்வரங்கம் ஒன்றை கடந்த சனிக்கிழமை ஏற்பாடு செய்திருந்தது.*

*மலையகம் மற்றும் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த துறை சார் வல்லுனர்கள், புத்திஜீவிகள், கல்வி புலத்தை சேர்ந்தவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், நாடகத் துறையை சேர்ந்தவர்கள் என பலரும் ஒருங்கிணைந்து இருந்த இந்த ஆய்வு மகாநாடு மேற்படி 'மலையகம் 200" நிகழ்ச்சி திட்டத்தின் ஒரு முக்கிய நிகழ்வாக கருதப்படுவதாக அமைந்தது.*

*அங்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் ஒரு நூலாக தொகுக்கப்பட்டு வெளியீடு செய்யப்பட்டமை மலையக மக்களின் பிரச்சினைகளை ஆவணப்படுத்துதல் தொடர்பில் ஒரு முக்கியமான செயல் நடவடிக்கை என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*இருப்பினும் அங்கு வருகை தந்த ஆய்வாளர்களுக்கு தமது ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்க போதுமான நேரம் ஒதுக்கப்படாமை ஒரு குறைபாடாக தெரிந்தது. இத்தகைய ஆய்வு கருத்தரங்குகளின் போது இம் மக்களின் உரிமைப் பிரச்னைகளை தீர்ப்பதற்கான விதந்துறைகளும் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டு அவற்றை ஆவணமாக்கி உரிய அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும் என்பது கட்டாயத் தேவையாகும். இத்தகைய குறைபாடுகளை தவிர்த்து மீண்டும் இத்தகைய கருத்தரங்குகளை பல பகுதிகளிலும் ஏற்படுத்தி அரசியல் தீர்வு நகர்வு நோக்கி இட்டு செல்வது இன்றைய காலகட்டத்தில் அவசரமானதும் அவசியமானதும் ஆகும்.*

*இந்த நிகழ்வை ஏற்பாடு செய்த பேராதனை பல்கலைக்கழக தமிழ் துறை தலைவர் பேராசிரியர் சிறி பிரசாந்தன் உள்ளிட்ட குழுவினருக்கு பாராட்டுக்களும் நன்றிகளும்.*




●

ஈழநாடு

### இளம் பிக்குகள் துஷ்பிரயோகம்

# பிரதம பௌத்த மதகுரு தொடர்பான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு!

கல்முனை, ஓக. 25

சட்டமா அதிபரின் கவனத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் தொடர்பில் உரிய ஆலோசனை கிடைக்கும் வரை இளம் பிக்குகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு பல நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்ட பிரதம பௌத்த மதகுரு தொடர்பான வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஹாரை ஒன்றில் வைத்து 3 இளம் பிக்குகள் பாலியல் துஸ்பிரயோகம் செய்தமை தொடர்பிலான வழக்கு கடந்த புதன்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணிகளின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை மறுவிசாரணைக்காக குறித்த வழக்கினை கல்முனை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

மேலும் குறித்த பாலியல் துஸ்பிரயோக வழக்கில் பிரதான சந்தேக நபராக குறிப்பிடப்படும் கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதி சார்பில் முன்னாள் அமைச்சரும் சட்டத்தரணியுமான ஸ்ரீயானி விஜேவிக்கிரம தலைமையிலான சட்டத்தரணிகள் குழு ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டம் சடயந்தலாவை பகுதி ஒரு குடும்பத்தை சேர்ந்த 3 இளம் பிக்குகள் கல்முனை பகுதியில் அமைந்துள்ள விஹாரை ஒன்றில் பாலியல் துஸ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் ஒன்றின் அடிப்படையில் 2022 செப்ரெம்பர் 13 ஆம் திகதி கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதியாக ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர் என்றழைக்கப்படும் பிரதான பௌத்த மதகுரு அம்பாறை மாவட்ட சிறுவர் பெண்கள் விசேட பிரிவினரால் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு கல்முனை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தமை யாவரும் அறிந்ததே.

இதனடிப்படையில் கல்முனை நீதிமன்ற நீதிவான் கைதான சந்தேக நபரான பௌத்த மதகுரு தொடர்புபட்ட 3 வழக்குகளில் தலா 3 பேர் வீதம் 9 பேர் கொண்ட 5 இலட்சம் பெறுமதியான சரீரப்பிணையில் செல்லவேண்டும் ஒவ்வொரு மாத இறுதியில் மீண்டும் அருகில் உள்ள கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு சென்று கையொப்பம் இடுதல் குறித்த வழக்கின் சாட்சிகள் குடும்பத்தினரை அச்சுறுத்துதல் வழக்கு தொடர்பிலான தலையீடு செய்யாதிருத்தல் வேண்டும் வெளிநாடு செல்வதற்கு தடை அதாவது கடவுச்சீட்டினை மன்றிற்கு ஒப்படைத்தல் வேண்டும் அவ்வாறு தன்னிடம் கடவுச்சீட்டு இல்லை எனின் உரிய தரப்பினரின் உறுதிப்படுத்தி மன்றிற்கு தெரிவிக்க வேண்டும் கிராம சேவகரின் நலச்சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும் என்ற கடும் நிபந்தனையுடன் குறித்த பௌத்த மதகுரு பிணையில் விடுவித்து உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இவ்வழக்கு மீண்டும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி வரை வழக்கினை நீதிவான் ஒத்தி வைக்க உத்தரவிட்டார்.

(அ)

# செங்கலடி பிரதேச செயலகத்தில் 3ஆவது மாபெரும் இரத்ததானம்!



காரைதீவு, ஓக. 25

ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த வருடாந்த இரத்ததான நிகழ்வு பிரதேச செயலாளர் கோ. தனபாலசுந்தரம் தலைமையில் மூன்றாவது தடவையாக நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் எனும் தொனிப்பொருளில் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வருடாந்தம் இடம்பெற்று வரும் இவ்விரத்ததான நிகழ்வினூடாக அப்பிரதேச மக்களின் நலனுக்காக பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், விளையட்டுக் கழக வீரர்கள், சமுக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என பலரும் உதிரக் கொடை கொடுக்கும் சமுகப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரதேச செயலாளர் தனபாலசுந்தரத்தின் ஆலோசனை வழிகாட்டலின் கீழ் உதவி பிரதேச செயலாளர் நிருபா பிருந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆ. சுதாகரன் ஆகியோரின் ஏற்பாட்டில் இவ்விரத்ததான நிகழ்வு நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கிக்குப் பொருப்பான வைத்திய அதிகாரி தலைமையிலான தாததியர் குழு இன்றைய இரத்ததான நிகழ்வில் உதிரம் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந் நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச இளைஞர் கழகங்கள், விளையாட்டு கழகங்கள், மாதர் சங்கங்கள் கிராம அபிவிருத்தி சங்கங்களின் உறுப்பினர்கள், ஏறாவூர் நகர இளைஞர்கள் என பலரும் ஆர்வத்தோடு கலந்து கொண்டு இரத்தம் தானம் செய்தனர்.

(அ)





